Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (11.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 347

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/934)



சந்திரிகா இரகசியப் பேச்சு

10



பளுதூக்குதலில் வெண்கலப் பதக்கம்

06



நுகர்வோரை பாதுகாக்க...

08



இன்று செப்டெம்பர் 11

13

## மர்ம மனிதன் பீதியால் தொல்புரத்தில் பதற்றம்

(தொல்புரம்)

தொல்புரம் பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட மர்மமனிதன் பீதியினால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றநிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொல்புரம் கண்டாமை எனும் இடத்திலுள்ள கோபால் கந்தசாமி என்பவரது வீட்டினுள் மர்ம மனிதனொருவன் நுழைந்ததாகவும் இதனையடுத்து வீட்டார் அலறியடித்த நிலையில் அருகிலுள்ள முத்துமாரியம்மன் கோவிலில் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்ட இளைஞர்கள் மர்ம மனிதனை கலைத்துச் சென்ற நிலையில் மர்ம மனிதன் மாயமாகி விட்டான்.

இந்தநிலையில் மர்ம மனிதனைத் தேடி இளைஞர்கள் அப்பகுதியில் திரிந்த வேளை மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இரண்டு இராணுவத்தினர் அப்பகுதியிலுள்ள வாழைத் தோட்டமொன்றிற்குள் நின்றனர். இவர்கள் இராணுவத்தினர் என அறியாத இளைஞர்கள் அவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவித்தனர். இதற்கிடையில் அப்பகுதிக்கு பொல்லுகள், (15 ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதன் குறித்த தகவலை அளிக்க மேலும் நான்கு கருமபீடங்கள் திறப்பு

### ஆளுநர் தலைமையில் நடந்த கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)

மர்ம மனித விவகாரம் தொடர்பாக பொதுமக்கள் தொடர்புகொள்வதற்கு வசதியாக அமைக்கப்பட்ட மேலும் 4 கருமபீடங்கள் இன்றுமுதல் செயற்படவுள்ளது. இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது. மர்ம மனிதன் விவகாரத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அச்சநிலையைப் போக்குவதற்காக ஏற்கனவே 8 விசேட கருமபீடங்கள் திறக்கப்பட்ட போதும் அது செயற்திறன் அற்று காணப்பட்டமையால் மேலதிகமாக தொடர்புகளை இலகுவாக்கும் பொருட்டு 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களிலேயே இந்த விசேட கருமபீடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையை முன்னோக்கி நகர்த்த ஆணைக்குழுவின் அறிக்கை உதவுமா?



## அறிய வருகிறார் பிளேக்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் வெளிவருமென எதிர்பார்க்கப்படும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடியதாக இருக்குமா என்பதனை உறுதிப்படுத்துவதே தமது நோக்கமெனவும் இதற்காகவே கொழும்பிற்கான பயணத்தை பிளேக் மேற்கொள்ளவுள்ளாரெனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிலையில், உதவிச் செயலாளர் பிளேக்கின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது அவர் மீண்டும் பயணம் செய்கிறார். ஆனால் இதற்கிடையில் இலங்கைக்கு சாதகமில்லாத சில விடயங்கள் இடம்பெற்றுள்ளன. ஏனெனில் ஐ.நா. மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பல அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இந்த அறிக்கைகள் காரணாமக அவரின் திட்டத்தில் மாற்றம் ஏற்படுமா? என செய்தியாளர் ஒருவர் வினவினார்.

அக்கேள்விக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட், பதிலளிக்கையில், இல்லை. அவர் தற்போது தன் பயணத்தில் சென்றுகொண்டிருக்கிறார். சூறாவளி காரணமாக அவரால் விமானத்தில் பறக்க முடியவில்லை என்பதால் அவரின் பயணம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. அவர் இலங்கையில் ஆக்கபூர்வமான சந்திப்புகளை எதிர்பார்க்கிறார் என்றார்.

ஐ.நா. மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கைகள் குறித்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு சுஷ்மா குழு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் தனது தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவொன்று இலங்கை செல்லவுள்ளதாக இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் முடிவடைந்ததைத் தொடர்ந்து, இரு சபைகளின் எதிர்க்கட்சி தலைவரான சுஷ்மா சுவராஜ், டெல்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்தார்.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கை தமிழர் பிரச்சினை நாடு முழுவதும் கவலையை

(15 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபை இறைமையில் தலையிடுகிறது

### குற்றம்சாட்டுகிறது அரசாங்கம்

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபை நாட்டின் இறைமையில் தலையீடு செய்வதாகவும், விசாரணையின்றி முன்கூட்டியே தீர்ப்பை வழங்கும் நீதவானைப் போலச் செயற்படுவதாகவும் அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பான நம்பகத்தன்மை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை எழுப்பிய கேள்வி தொடர்பாக தனது வன்மையான கண்டனத்தை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சு நேற்றைய தினம் தெரிவித்துள்ளதாவது,

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதியே வெளியிடப்படவுள்ளது. அதற்கு முன்னர் சர்வதேச மன்னிப்புச் சபை ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பாக சந்தேகம் எழுப்பியதனை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இவ்வாறான சந்தேகங்கள், இறைமையுள்ள ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீட்டையே ஏற்படுத்தும். இவ்வாறான தேவையற்ற தலையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் 6000 குடும்பங்கள் நன்மையடையும்

(யாழ்ப்பாணம்)

வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 6000 குடும்ப அலகுகளை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதே நோக்கமெனவும், இதன் மூலம் எமது மக்கள் சிறந்த பயனைப் பெற்றுக் கொள்வார்கள் என நம்புவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட குடிசைக் கைத்தொழிற்துறை தொடர்பான கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது மக்களுக்கானதும் இப்பகுதிக்குமானதுமான துரித பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தின் முன்னேற்றம் கருதி மேற்கொள்ளப்படுகின்ற இத்தகையப் பணிகளுக்கு பங்களிப்புக்களை



வழங்குவதற்கு எமது மக்கள் அணிதிரண்டு முன்வர வேண்டும்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் இப்பகுதியின் மேம்பாடுகள் தொடர்பில் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறார்கள்.

எனவே எமது மக்களின் அமைதி வாழ்வினையும் அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளையும் சகித்துக் கொள்ள இயலாத சில தீய சக்திகள் சமூகவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனை

(15 ஆம் பக்கம் பார்க்க)

# மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உணவல்லா பொருட்கள் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கின் கிழக் கெல்லைக் கிராமங்களில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் வட மராட்சிக் கிழக்குப் பிரிவின் ஊடாக 352 குடும்பங்களுக்கு உணவல்லாத பாவனைப் பொருட்களை அண்மையில் கட் டைக்காடு பொது மண்டபத்தில் வைத்து வழங்கியுள்ளனர்.

இதில், வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவில் 84 குடும்பங்களுக்கும், முள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் 192 குடும்பங்களுக்கும் போக்கறப்பு கிராம அலுவலர் பிரிவில் 76 குடும்பங்களுக்குமாக மொத்தம் 352 குடும்பங்களுக்கு சவர்க்காரம், பற்பசை, தூரிகை, துவாய், சீப்பு, கத்தரிக்கோல் போன்ற நாளாந்த பாவனைப் பொருட்க ளுடன் பாய், வலை என்பனவும் வழங்கப்பட்டன. (70)

# 'சித்திரத் தூவானம்' சிறுவர் சித்திரக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத் தின் கலைத்தூது அழகியல் கல் லூரியில் சித்திரப் பாடத்தை பயில்கின்ற சிறார்களின் ஓவியங் களைக் கொண்ட 'சித்திரத்தூவா னம்" என்னும் சித்திரக் காட்சி இன்றும், நாளையும் இல.15, றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்ற வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

இரு நாட்களும் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ள இக் கண் காட்சியின் இன்றைய ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.புனித ஜேம்ஸ் மகாவித் தியாலய அதிபர் திருமதி எஸ். மகேஸ்வரன், சிறப்பு விருந்தின ராக யாழ்.கல்வி வலய சித்திரப் பாட ஆசிரிய ஆலோசகர் ரி.துஸ் யந்தன் கலந்து சிறப்பிக்கவுள் ளனர். (52)

# மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக்கொள்ள அழைப்பு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செய லகத்தினால் இலவசமாக மூக் குக் கண்ணாடி பெறுவதற்கும், காது கேட்கும் கருவியைப் பெறு வதற்கும் விண்ணப்பித்தவர்களில் பின்வருவோர் உடனடியாகப் பிர தேச செயலகத்திற்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளு மாறு சமூகசேவை உத்தியோகத் தர் வி. அருந்தவராசா அறிவித் துள்ளார்.

இதில், ஜே/135 நவாலி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ரஞ் சிதமலர், உஷாநந்தினி, மு. பானுஜா மற்றும் ஜே/130 சுதுமலை தெற்கு கிராம அலுவலா பிரிவில் நித்தியானந்ததேவி ஆகி யோர் மூக்குக் கண்ணாடிக்கும், தல்வாய் வீதி சண்டிலிப்பா யைச் சேர்ந்த த.தெய்வானை காது கேட்கும் கருவியை பெறு வதற் கும் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (104)

# இரதோற்சவம்

(ஓட்டுசுட்டான்)

சம்மளந்துளாய் விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெற்று வருவதுடன், நாளைய தினம் இரதோற்சவமும் நாளை மறுதினம் தீர்த்தோற சவமும் நடைபெறவுள்ளது.(101)

# சிகை ஒப்பனையாளர் சங்க புதிய பணிமனை திறப்புவிழா

யாழ்-மாவட்ட சிகை ஒப்பனை யாளர் சங்கத்தின் புதிய பணி மனை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எளிமையான முறையில் திறந்து வைக்கப்பட இருக்கும் புதிய பணிமனை நல்லூர், பருத் தித்துறை வீதியில் அமைந் துள்ள செங்குந்தா நவீன சந்தை மேல்மாடியில் 51ஆம் இலக்கத் தில் அமைய உள்ளது.

கடந்த சில வருடங்களாக சங்கம் பணிமனை இல்லாமல் இயங்கி வந்ததும் யாழ் ஆஸ் பத்திரி வீதியில் அமைந்திருந்த பணிமனை 2006ஆம் ஆண்டு விசமிகளால் சேதமாக்கப்பட்டதும் சங்கத்தில் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் சூறையாடப்பட்டதும் குறிப்பி டத்தக்கது.

# பேருந்து விபத்துக்குள்ளானதில் வயோதிபப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலிருந்து யாழ். நோக்கி வந்து கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பேருந்து சைக்கிள் குறுக்கே சென்றதனால் தடம்புரண்டு விபத் துக்குள்ளானதில் வயோதிபப் பெண் படுகாயமடைந்தார்.

யாழ்.செயலகத்திற்கு அண் மையில் நேற்றுக்காலை 8.00 மணிக்கு இடம்பெற்ற இவ் விபத்தில் நாவற்குழியைச் சேர்ந்த மகாலிங்கம் துரைமணி (வயது- 60) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்போதனா வைத்தி யசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

# கைதான இராணுவத்தினர் விளக்கமறியலில்

பளைப் பகுதியில் ஆயுதமுனையில் அச்சுறுத்திக் கைத்தொலை பேசி மூலம் கப்பம் பெறமுயற்சித்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 3 இராணுவத்தினரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மூவரையும் கைது செய்த கிளிநொச்சி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

நீதவான் இம்மூவரையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், அடையாள அணிவகுப் புக்கும் உத்தரவிட்டார். (கே)

(முன்னர் வந்த செய்தி 10ஆம் பக்கத்தில்)


## தேரின் சௌபாக்கியம் கிடைத்திடும்



**சந்நிதியில்**

நிம்மதியாய் உன் குடும்பம்
நீள்நிலத்தில் வெல்வதாயின் – முருகன்
சந்நிதிக்குச் சென்று பார் தேரின்
சௌபாக்கியம் கிடைத்திடும் உனக்கு

**மஞ்சவனப்பதியில்**

கெஞ்சாமல் நீ வாழ கொக்குவில்
மஞ்சவனத்திற்கு வந்து வடம் பிடி
அஞ்சாமல் இந்நாடு அவனியில் வாழ்வதாயின்
நெஞ்சே! நீ வந்து தேரை வடம்பிடி!

**கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.**



## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை
## ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்
### ஊடகவியல் குறுங்காலப் பயிற்சி III
### "புலனாய்வு மற்றும் அரசியல் இதழியல்" "Investigative and Political Journalism"

பத்திரிகைத்துறை சார்ந்தோரிற்கான குறுங்காலப்பயிற்சி ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை மாலை 3.00 மணிதொடக்கம் மாலை 6.00 மணிவரை நடை பெறவுள்ளது.

**யார் யார் பங்குபற்றலாம்?**

- செய்தி இதழ் ஆசிரியர்கள்
- அலுவலக மற்றும் பிரதேச செய்தியாளர்கள்
- சிறு சஞ்சிகை ஆசிரியர்கள்
- பருவகால பத்திரிகைகளில் பணிபுரிவோர்
- நிறுவனங்களின் தொடர்பாடல் மற்றும் ஊடக உத்தியோகத்தர்கள்
- பாடசாலைகளில் ஊடகக்கல்வி ஆசிரியர்கள்

பயிற்சிக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சுவீடன் நாட்டின் போயோ (FOJO) நிறுவனத்தின் ஊடகவியல் விரிவுரையாளரும், பயிற்றுவிப்பாளருமான வில்லி ஒலிவர் (Willie Olivier) அவர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

பயிற்சி விரிவுரைகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியதான 30 மணித்தியாலங்களைக் கொண்டதாகும்.

பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் 15.09.2011 இற்கு முன்னதாக நேரடியாகவோ, தொலைபேசியூடாகவோ பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.



தொடர்பு முகவரி : -
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,
இல. 84, ஜும்மா பள்ளி லேன்,
யாழ்ப்பாணம்
(வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி இல:-021-2229873
மின்னஞ்சல் : directormrtc@gmail.com

பதிவாளர்.
09.09.2011

(C/925)







## வல்லசுரர் அழிந்திடவும் வல்வினைகள் நீங்கிடவும்
## வடிவேலைக் கைக்கொண்டு தேரேறிவா முருகா

# நியூ லலிதா ஜீவல்லர்ஸ்
## தங்கப்பவுண் நகை வியாபாரம்



உங்களின் எண்ணம் போல தங்க நகைகளை தரமாகவும் நியாயமான விலையினிலும் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்!

இல: 191 H.K, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 4648

(C/941)

வறுமையை எண்ணி சிலர் பயப்படுகின்றனர். எண்ணியது நடக்குமோ நடக்காதோ என்று பயப்படுவோரும் உண்டு. எல்லாக் கவலைக்கும் அச்சமே காரணமாக இருக்கின்றது. நம் உச்சந்தலையில் வானமே இடிந்து விழுந்தாலும்கூட அச்சப்படக்கூடாது. - பாரதியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## செய்ய வேண்டியது என்ன?

தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் பழக்க அனுப்பி வைத்துவிட்டும், மனைவிமாரை, குடும்பத்தினரை வெளிநாடுகளில் வீடுகள் வாங்கிப் பாதுகாப்பாகத் தங்க வைத்துவிட்டும் இங்கு அரசியல் செய்வோரால், மக்களுக்கு அடி வாங்கிக் கொடுத்தும் வதைபட வைத்தும் ஆதரவு தேடுவதைக் கூச்சமின்றிச் செய்து கொண்டிருக்க முடிகிறது.

மக்கள் வதைபட அவையெல்லாம் தமிழாவேசத்தின் வாக்குகளாக மலரும் என்கிற உத்தியைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதில் அவர்களுக்கு இழப்புமில்லை, நோவுமில்லை. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடியபோது, வன்னிக்குள வதைபட்ட மக்கள் இவர்களைப் பற்றிப் புரிந்து கொண்டதென்னவோ உண்மைதான்! ஆனால் மீண்டும் இன வெறுப்புத் தீயை மூட்டிவிடும் சாதுரியத்தால் அதையெல்லாம் மறக்கப் பண்ணினார்கள்.

வெளிநாட்டில் குடும்பமும், இங்குள்ளவர்களிடம் 'விடாதே சிங்களவனை' என்ற வீர ஜம்பமுமாக அரசியல் செய்யும் இவர்களை, நாட்டின் ஜனாதிபதியே நக்கலடித்திருப்பது கடைசிச் செய்தி. கிறீஸ் மனிதன் பிரச்சினை பற்றிப் பேசப் போன யாழ். மாவட்ட எம்பிக்களில் ஒருவரைப் பார்த்து, "உமது மகளுக்கு நீர் யாழ்ப்பாணத்தைக் காட்ட வேண்டாமா?" என்று ஆச்சரியத்தோடு வினவியதாக அந்தச் செய்தி குறிப்பிடுகிறது. இப்படித்தான் இருக்கிறது தமிழ்ப் பிரதிநிதிகளின் நிலை!

கடந்த 60 வருடங்களாகத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையைத் தொடர்ச்சியாகத் தங்களிடம் வைத்திருப்பதில் அக்கறை செலுத்தினார்களே தவிர, தமிழ்மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்துகொள்ள ஆக்கபூர்வமான முயற்சிகளை இவர்கள் எடுத்ததில்லை. கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் குழப்பியபடியே தொடர்ச்சியாக நாடாளுமன்றக் கதிரைகளைத் தக்கவைத்து வந்திருக்கிறார்கள். ஆனானப்பட்ட புலிகள் காலத்தில் கூட அவர்களது அலுவலக வெளிவாசலில் போடப்பட்ட வாங்குகளில் மணிக்கணக்காகக் காத்திருந்து, உள்ளே மனம் வெதும்பியபடியே அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுப் பவ்வியமாகத் தலையாட்டி, கதிரைகளை விடாமல் கைப்பற்றியிருக்கிறார்கள்.

இப்படியே ஆறு தசாப்த காலம் தொடர்ச்சியாகத் தமிழ்மக்களுக்கு அரசியல் தலைமை வகித்து இவர்கள் சாதித்தது என்ன? அழிவுகளும், இழப்புக்களும், சமூகத்தாழ்ச்சியும்... உச்சமாக முள்ளிவாய்க்கால் பாடழிவும் தந்ததுதானே இவர்களது தலைமைத்துவ சாதனை! இவர்களது தமிழாவேசப்படுத்தல்களின் பின்னால் போய் தமிழ்மக்கள் பின்னடைவுகளையே தொடர்ச்சியாகச் சந்தித்தார்கள்.

வரலாற்றில் முன்னர் ஒருபோதும் இடம்பெற்றிருக்காத அவலங்களைத் தமிழ்மக்களுக்கு ஏற்படுத்திய இவர்கள், அது பற்றிய எந்த சுயவிமர்சனமும் செய்துகொள்ளாமல், பாதையையும் மாற்றாமல், அதே 'உணர்ச்சிகரப்பேச்சு' அரசியலையே செய்து வருகிறார்கள். ஆயுதப் போராட்டமோ தனிநாடோ சாத்தியமில்லை என்பது வெகுதெளிவாகிவிட்ட இந்நிலையிலும் அந்த மாயைகளை ஊட்டும் போர் வெழப்புப் பேச்சிலேயே மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இன்றைய யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட ஒரு வேலைத் திட்டத்தைத் தயாரித்துச் செயற்படுவதற்குரிய எந்த முயற்சிகளும் கூட்டமைப்பிடம் காணமுடியவில்லை. தாங்களாக எதுவும் செய்ய முற்படாமல், சர்வதேச சமூகம் கைகொடுக்கும் என்ற கள்ள எதிர்பார்ப்பையே கசியவிட்டு ஏமாற்றுகிறார்கள்.

இனவெறுப்பையும் விரிசலையும் விரோதத்தையும் பேசிப் பேசிப் பெரிதாக்கிக் கொண்டிருப்பதன் மூலம், இந்தத் தீவில் ஏனைய சமூகங்களுடன் சேர்ந்தே தமிழ்மக்களின் வாழ்வு என்ற யதார்த்தத்தை ஒளித்து வருகிறார்கள். தமிழ்மக்களின் பிரச்சினைகளும் கோரிக்கைகளும் சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற தோற்றத்தையே இவர்களது சுயலாப அரசியலுக்காகக் காட்டி வருகிறார்கள். சிங்கள மக்கள் மத்தியிலும் ஆதரவுத் தளமொன்றைப் பெற்றுக் கொள்ள எந்த முயற்சியும் செய்யாமல், இந்த நாட்டில் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு எந்த உலகத்தில் இருந்து வரும்?

இனப்பிரச்சினைத் தீர்வில் உண்மையான அக்கறை கொண்டவர்கள், இதுகாலவரையான தமிழ்த் தலைமைத்துவத்தின் தவறை இனங்கண்டுகொள்ள வேண்டிய தருணமிது. இவர்கள் எதை நோக்கித் தொடர் பயணம் போகிறார்கள் என்பதை ஒவ்வொருவரும் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

புதிதாகச் சிந்திக்கச் சோம்பல்பட்டு, பழைய கோபதாபங்களையும், வெறுப்பையும், 'சிங்களவன் ஒருநாளும் சரிவரமாட்டான்' என்ற நம் நீண்டகாலக் கண்டுபிடிப்பையுமே சொல்லிக் கொண்டிருக்கும் வாய்ப்பாட்டு அரசியலால் என்ன சாதிக்கப்போகிறோம்? யோசிக்கமாட்டார்களா மக்கள்?

– ஆசிரியர்.

# பாலியல் சுரண்டல்கள் இலங்கையில் தாராளம்

## அமெரிக்க அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

சிறுவர்கள் கடத்தப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கை முக்கிய இடம்பிடித்துள்ளதாக மனிதக்கடத்தல்கள் தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் வெளியிட்ட அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆண்கள், பெண்கள் சிறார்கள் ஆகியோர் கட்டாய வேலைவாங்கல் மற்றும் பாலியல் சுரண்டல்களுக்காக கடத்தப்படுவதில் இலஙகை ஒரு மூலமாக உள்ளது. இலங்கையின் ஆண்கள், பெண்கள், சிறார்கள் குவைத், ஜோர்டான், சவூதி அரேபியா, கட்டார், லெபனான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஏமன், பஹ்ரெய்ன், சிங்கப்பூர், ஆகிய நாடுகளுக்கு நிர்மாணத் தொழிலாளர்களாக, வீட்டுப்பணியாளர்களாக அல்லது தொழிற்சாலை ஊழியர்களாகச் செல்கின்றனர்.

அத்தொழிலாளர்களில் சிலர், நடமாட்டக் கட்டுப்பாடு, கடவுச்சீட்டை தடுத்துவைத்தல், அச்சுறுத்தல் உடல் ரீதியான அல்லது பாலியல் துஷ்பிரயோகம் போன்றவற்றின் மூலம் கட்டாய வேலைசெய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஐ.அ.எமிரேட்ஸ் போன்ற நாடுகளிலிருந்து வரும் ஆண்களுக்கும், பெண்களுக்குமான இடைத்தங்கல் நாடாகவும் இலங்கை உள்ளது.

இலங்கையில் பெண்களும், சிறார்களும் விபச்சார விடுதிகளுக்கு பாலியல் கடத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

சிறுமிகளைவிட சிறுவர்கள் விபச்சாரத்திற்கு தள்ளப்படுகின்றனர். குறிப்பாக கரையோரப் பகுதிகளில் பாலியல் சுற்றுலாவுக்காக இது நடைபெறுகிறது.சுமார் 1,000 சிறார்கள் இலங்கையில் பாலியல் சுரண்டல்களுக்குள்ளாவதாக 2009 ஆம் ஆண்டில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மதிப்பிட்டிருந்தது. எனினும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த எண்ணிக்கை 10,000 முதல் 15,000 க்கும் இடைப்பட்டதாகும் எனத் தெரிவித்திருந்தன.

யுத்தத்தின் பின்னர் வறுமையான கிழக்குக் கரையோரத்தில் அண்மையில் ஏற்பட்ட சுற்றுலா அதிகரிப்பானது சிறுவர் பாலியல் சுற்றுலாவுக்கான கேள்வியை அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கில் கிறிஸ் பூதங்கள் லண்டனில் பிரசார யுத்தம்

## கூட்டமைப்பு எம்.பி.க்கள் மீது விசாரணை

(கொழும்பு)

வடக்கில் கிறிஸ் பூதங்கள் பீதியைக்கிளப்புவதாக லண்டனில் பிரசாரம் செய்தமைக்காக இரண்டு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் லண்டனுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். கிறிஸ் பூதங்கள் வடக்கு வாழ் தமிழ்ப் பெண்களை பீதியடையச் செய்து வருவதாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் லண்டனில் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் குறித்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் லண்டனில் நிதி திரட்டல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்ததாகக் குறித்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா மற்றும் சிவஞானம் சிறிதரன் ஆகியோர் லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்புடன் பேச்சு ரொபேட் ஓ பிளேக் அதிக ஆர்வம்



(கொழும்பு)

நாளை மறுதினம் இலங்கை வரும் அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான இராஜாங்கச் செயலாளர் திரு.ரொபேட் ஓபிளேக் இலங்கையில் தங்கியிருக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார் இலங்கை விஜயத்துக்கான பிளேக்கின் நிகழ்ச்சி நிரலில் கூட்டமைப்புடனான பேச்சுக்கு முக்கிய. இடம் கொடுக்கப்பட்டிருக் கிறது.

முதற்கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் அமெரிக்காவின் தெற்காசியாவுக்கான இராஜாங்க செயலாளர் ரொபேட் ஓ. பிளேக்கை எதிர்வரும் 12 ஆம் திகதி சந்தித்து உரையாடவுள்ளார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் 12 ஆம் திகதி காலை 7.10 மணிக்கு நடைபெறும் இச்சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் பற்றி இராஜாங்கச் செயலாளருடன் சம்பந்தன் உரையாடவிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த மாதப் பிற்பகுதியில் வரவிருந்த பிளேக், தவிர்க்க முடியாத காரணத்தினால் இலங்கை விஜயத்தை ஒத்திவைத்தார்.

# முன்னாள் புலிகள் மீது வழக்கு அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கத்தக்க நிலையில் காணப்படும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 881 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இந்த குற்றச்சாட்டுக்களை உறுதி செய்வதற்காக தற்போது அவர்கள் மீது மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சவேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளில் 22 பேர் மீது நீதவானால் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

278 பேருக்கு மேல்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 200 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

204 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறுதிக்கட்ட போரின் போது கைது செய்யப்பட்ட 4281 தமிழீழ விடுதலைப்புலிகளில் 1000 பேர் சாட்சியங்கள் அற்றநிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


இதேவேளை அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள தமிழீழ விடுதலைப்புலி சந்தேகத்துக்குரியவர்கள் தொடர்பில் சட்டநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# வேலணைப் பகுதியில் நீர்நிலைகள் புனரமைப்பு விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தீவகம், வேலணைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதியின் முக்கிய நீர்நிலைகளைப் பார்வையிட்டு அவற்றை ஆழமாக்கி மழை நீரை சேமிப்பதுடன் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

தீவகத்தில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்ற அதேவேளை, கால்நடைகளும் குடி தண்ணீரின்றி அவதிப்படுகின்றன. இந்நிலையில் அப்பகுதியிலுள்ள குளங்களை ஆழப்படுத்தி அவற்றில் மழை நீரைத் தேக்குவதனூடாக குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு அவற்றை ஆழமாக்கும் பணிகள் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளன.



இதன் பிரகாரம் குறிகட்டுவான் பிரதான வீதி அண்மையிலுள்ள இடி விழுந்த குன்று அராலிச் சந்திக்கு அண்மையிலுள்ள நன்னீர்த் தேக்கம் வேலணை வெட்டுக்குளம், வேலணை பெருங்குளம் ஆகிய குளங்களைப் பார்வையிட்ட அமைச்சர், அவற்றை ஆழப்படுத்துவது தொடர்பில் முறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார். இதன் மூலம் வேலணைப் பகுதியில் நிலவும் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவரத்தி செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது அமைச்சர் அவர்களுடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் துறைசார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## இரதோற்சவம்

(யாழ். நிருபர்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 12ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (10)

## செயலமர்வு

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் சமூக விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாண வலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்ற இச்செயலமர்வில் தரம் ஆறு முதல் 11 வரையான வகுப்புகளில் சமூக விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (03)

## கலந்துரையாடல்

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலய அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருமுருகண்டி இந்து வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார். (121)

## நெற்செய்கையை துரிதப்படுத்தவும்

(கிளிநொச்சி)

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளத்து நீரினைப் பயன்படுத்தி காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தமது நெற்செய்கைக்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அம்பலப்பெருமாள் கமக்கார அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள் குளம் புனரமைக்கப்படவுள்ளதன் காரணத்தால் காலபோக நெற்செய்கையினை வேகப்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (121)

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விழிப்புணர்வு செயற்பாடுகள்

(கோப்பாய்)

யாழ். மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையினாலும், யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினராலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுகாதாரப் பகுதியினர் இது சம்பந்தமான தடுப்பு பிரசார நடவடிக்கையில் பகல், இரவாக மேற்கொண்டு வருகின்றனர்.

சுகாதாரப் பகுதியின் வாகனத்தில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கி மூலம் குடாநாட்டின் சகல மூலை முடுக்குகள், கிராமங்கள் தோறும் இந்த டெங்கின் விழிப்புணர்வு பிரசாரம் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

அதனைவிட வீடுவீடாகச் சென்று டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் பிரசார மற்றும் செயற்பாடுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுஇடங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் அலுவலங்கள் போன்றவற்றிலும் விசேட கருத்தரங்குகள் மற்றும் சமூக நடவடிக்கைகள் என்பனவும் நடாத்தப்பட்டு வருகின்றன. (வி, 105)

## வீட்டினுள் நுழைந்த மர்ம மனிதன் உணவினை உண்டுவிட்டு தப்பியோட்டம்

(அச்சுவேலி)

வீட்டில் யாரும் அற்றவேளையில் உள்நுழைந்த மர்ம மனிதன் அங்கு எப்பொருளும் கிடைக்காத நிலையில் சமயலறையில் இருந்த உணவினை உண்டுவிட்டு தப்பியோடிய சம்பவம் புத்தூர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: புத்தூர், வாதரவத்தை வீதிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் யாரும் அற்ற வேளையில் சமயலறையின் ஜன்னலை உடைத்து உள்நுழைந்துள்ளார்.

அங்கு எந்தவொரு பொருளும் கிடைக்காத நிலையில் சமயலறையிலிருந்த உணவினை உண்டு கொண்டிருந்தபோது வெளியே கடைக்குச் சென்றிருந்த வீட்டு உரிமையாளராகிய பெண்மணி வீட்டிற்கு வந்தபோது சமயலறையில் இனந்தெரியாத நபர் ஒருவர் இருப்பதைக் கண்டு சந்தமிட்டபோது அந்நபர் மீண்டும் ஜன்னல் வழியாகவே தப்பியோடியுள்ளார். இதை அறிந்த அயலவர்கள் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து சுற்று வட்டாரப் பகுதிகளில் சல்லடை போட்டுத் தேடியபோதிலும் எவரும் அகப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (03)

## வடமராட்சி வலய மட்ட திருக்குறள் மனனப்போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய மட்ட திருக்குறள் மனனப் போட்டி எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழைமை காலை 8.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 6-7 அதி கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கு, 1-5 அதிகாரங்களும், தரம் 8-9 கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கு 6-15 அதிகாரங்களும், தரம் 10-11 மத்திய பிரிவு மாணவர்களுக்கு 16-30 அதிகாரங்களும், தரம் 12-13 மேற்பிரிவு மாணவர்களுக்கு 3-50 அதிகாரங்களுமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் நடுவர்கள் கேட்கும் ஒரு அதிகாரத்தின் முழுமையான பத்துக் குறள்களையும் சொல்ல வேண்டும்.

ஏனைய மூன்று அதிகாரங்களில் திருவுளச்சீட்டு மூலம் எடுக்கப்பட்டு அதில் வரும் குறட்பாக்களில் குறள்களைக் கூறவேண்டும். மேலும் திருக்குறளின் ஒரு சொல்லைக்கூட நடுவர்கள் உச் சாடனம் செய்யமாட்டார்கள். திருக்குறளின் பொருள் கேட்கப்படமாட்டாது.

எனவே, மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை மாணவர்கள் பின்பற்றி போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (09)

## பொதிகளுக்கு அதிக பணத்தை அறவிடும் தனியார் பேருந்துகள்

(ஒட்டுசுட்டான்)

பிறமாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவுக்கு பயணத்தை மேற்கொள்ளும் தனியார் பேருந்து நடத்துநர்கள் பயணிகள் கொண்டுவரும், பொதிகளுக்கு கட்டுப்பாடற்ற தொகையினை அறவிடுவதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தனியார் பேருந்துச் சங்கம் தனியார் பேருந்து நடத்துநர்களுக்கும் சாரதிகளும் பொருட்களை ஏற்றுவதற்கான நிர்ணய விலையை அறிவித்தால் இந்த நிலை ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் தங்களுடைய பொருட்களை ஏற்றுவதற்கு நியாய விலையினை வழங்க முடியும் என தெரிவிக்கின்றனர். (101)

## விஞ்ஞான புத்தாக்கக் கண்காட்சி கோட்டத்தில் கலந்துரையாடல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்ட மட்ட விஞ்ஞான மற்றும் புத்தாக்கக் கண்காட்சி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். வலய விஞ்ஞானப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இம்முறை விஞ்ஞான மற்றும் புத்தாக்கக் கண்காட்சியினை கோட்ட மட்டத்தில் நடத்தி அதன் மூலம் வலய மட்டத்திற்கு தெரிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தரம் ஆறு முதல் 13 வரையான வகுப்புக்களில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் ஒருவரை அல்லது விஞ்ஞான பாட இணைப்பாளரை இக்கலந்துரையாடலில் தவறாது பங்குகொள்வதற்கு ஆவன செய்யுமாறு அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் பின்வரும் கால அட்டவணைக்கேற்ப இடம்பெறவுள்ளது.

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 14ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கும், நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு வலயக் கல்வி அலுவலகம் முகாமைத்துவ மண்டபத்தில் 15ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கும், யாழ்ப்பாணம் கல்விக் கோட்டத்திற்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் 16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கும் இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்களை தவறாறு கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (03)





ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி முன்பள்ளி விளையாட்டு விழாவில் ஐக்கிய சனசமூக நிலைய தலைவர் திரு.யோ.கீதபொன்கலன் கொடியேற்றுவதையும், அருகில் அடைக்கலநாயகி முன்பள்ளித் தலைவர் யோ.யோண்சிங்கம் மற்றும் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை ஜோதிநாதன், விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள், பெற்றோர்களைக் காணலாம்.

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மாநகரசபை தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரப் பகுதியில் இவ்வாண்டு தை மாதத்தில் இருந்து ஆவணி மாதம் வரை 64 பேருக்கு டெங்குநோய் ஏற்பட்டுள்ளது என யாழ். மாநகரசபையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகமான நோயாளர்கள் தென்பகுதியிலிருந்து இங்கு வந்தவர்களின் மூலம் நோய் தொற்றுக்கு ஆளானவர்கள் என்பது உணரபபட்டுள்ளது ஒரு சில டெங்கு நோயாளர்களுக்கே இங்கு தொற்று ஏற்பட்டமை அறியப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆவணி மாதத்தில் 11 டெங்கு நோயாளர்கள் அறிவிக்கப்பட்டு இருந்த போதிலும இவர்களில் 08 பேர் தென்பகுதியிலிருந்து வந்ததன் மூலம் டெங்கு ஏற்பட்டதாகும். மிகுதி மூவரும் இங்கு டெங்கு இன நுளம்பு இருப்பதன் மூலம் இப்பகுதியில் தொற்றுக்கு ஆளாகியுள்ளார்கள்.

எனவே இவற்றை இல்லா தொழிக்கும் நோக்கில் பாரிய அளவில் யாழ் மாநராட்சி மன்றப் பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன .

ஆரம்பத்தில் யாழ். மாநகர சபை நுளம்பிற்கான புகையூட்டல் பிரிவும் சங்கானை, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து புகையூட்டல் நடவடிக்கைகள் மற்றும் வீட்டுத்தரிசிப்பு ஏனைய நிறுவனம், பாடசாலைகள் என்பவையும் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடு வருகின்றன .

யாழ் போதனா வைத்திய சாலையில் டெங்கு நோயாளர்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருவதனால் கிழமைக்கு இரண்டு தடவை யாழ் போதனா வைத்தியசாலைக்கு நுளம்பிற்கு எதிரான புகையூட்டல் செயற்பாடும் நடைமுறைப்படுத்தப்படடு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தற்கமைய இன்று ஞாயிற்றுக் கிழமை கந்தன் நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்தடை அமுல் படுத்தப்படாது. ஆனால் உருமபிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கமைய மின்தடை அமுல் படுத்தப்படும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சந்நிதிக் கடல்நீரேரியில் நீராட எல்லைகள் நிர்ணயிப்பு

(அச்சுவேலி)

வருடாந்த மஹோற்சவம் இடம்பெற்று வரும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் பின்புறமாக அமைந்துள்ள கடல் நீரேரிப் பகுதியில் பகதர்களின் நன்மை கருதி நீராடச் செல்லும் பக்தர்களுக்காக எல்லைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடல்நீரேரிப் பகுதியில் நீராடச் செல்லும் பக்தர்களுக்கு அசம்பாவிதங்கள் எவையும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அங்கு மிதவைகள் கொண்ட கயிற்றின் மூலம் நீராடுவதற்கான எல்லைகள் வரையறுக்கப்பட்டிருப்பதால், அந்த எல்லையினைத் தாண்டிச் சென்று பக்தர்கள் நீராடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (03)

# ஆனையிறவு உப்பள உற்பத்தி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது

## அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(ஆனையிறவு)

போர் காரணமாக கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக மூடபபட்டிருந்த ஆனையிறவு உப்பள உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளது.

உப்பளப் பிரதேசம் முழுவதும் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்ட நிலையில் உப்பளப் பணிகளை மீண்டும் சம்பிரதாயபூர்வமாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிக விரைவில் ஆரம்பித்து வைக்க இருப்பதாக அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

1800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள ஆனையிறவு உப்பளத்தின் மூலம் வருடம் ஒன்றிற்கு 80 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்ய முடியும். 4000 பணியாளர்கள் வரை பணிபுரிந்த இந்த உப்பளத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படுவதால் ஆயிரம் வரையான வடபகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும் என அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.




# ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான செயற்திறன் போட்டிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகள் சிறுவர் அரங்கு, திருக்குறள், வாய்ப்பாடு மனனப் போட்டிகளில் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

பங்குபற்றாத பாடசாலைகள் தகுந்த காரணத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

மேலும் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற சிறுவர் அரங்க நிகழ்வில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரத்தையும், திருக்குறள் வாய்ப்பாடு, மனனப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப்பட்டியலையும் மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்தில் அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (109)

# விண்ணப்பம் கோரல்

(வலிகாமம்)

வடமாகாணக் கல்வித திணைக்களம் அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான புலமைப் பரிசில் கற்கை நெறிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஜப்பான் வழங்கவுள்ள இப்புலமைப் பரிசில் கற்கை நெறி தொடர்பான சுற்றுநிருபத்தை சகல வலயக் கல்விப் பணிமனைகளிலும் பார்வையிடலாம்.

# பெண்ணைத் தாக்கிய மர்ம மனிதன் மடக்கிப் பிடித்தபோதும் தப்பியோட்டம்

(பருத்தித்துறை)

மாவடி சமரபாகு வல்வெட்டி எனும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் மர்மமனிதனின் நடமாட்டத்தால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இரவு 9.45 மணியளவில் பெண் ஒருவர் தனது வீட்டிற்கு வெளியே வந்த போது இலைச் சருகுகள் அசையும் சத்தம் கேட்டது. அப்போது பற்றைக்குள்ளிருந்து வந்த இளைஞன் திடீரென அப்பெண்ணின் முதுகில் தாக்க அவர் அலறியபடி ஓடியுள்ளார்.

இதை வீட்டிற்குள் நின்ற கணவனும் கண்டு சத்தமிட இவர்களின் மகன் அந்த மர்ம மனிதனைத் துரத்திச் சென்று கட்டிப் பிடித்துள்ளார். அவரையும் தாக்கி விட்டு அந்த மர்மமனிதன் தப்பிச் சென்றுள்ளார்.

இதன் பின்னர் அப்பகுதி இளைஞர்களால் தேடுதல் நடத்தியபோது பற்றைக்குள் சாராயப் போத்தல் இருந்ததையும், அதில் ஒருவர் இருந்ததற்கான அடையாளத்தையும் கண்டுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு பதற்றமான சூழ்நிலையே காணப்பட்டது. (12)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

**11.09.2011 ஞாயிற்றுக்கிழமை**

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
**கர வருஷம்**
**ஆவணி 25 ஆம் நாள்.**
இராகுகாலம் 4.33-6.03, சுபநேரம் 9.03 -10.33,
நட்சத்திரம்: சதயம் பி.இ. 5.43 வரை
திதி: சதுர்த்தசி பி.ப 1.49வரை
போயா விடுமுறை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** பணவரவு, காரிய சித்தி, தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம், இனசன அழைப்பு.

**ரிஷபம:-** காரியத்தடை, பணக் கஷ்டம், வீண் அலைச்சல், குடும்பத்தில் குழப்பம், உடல் நலம் பாதிப்பு.

**மிதுனம் :-** பணவரவு, தொழில் விருத்தி, உறவினர் தொல்லை, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம்.

**கடகம்:-** கடன் வாங்குதல், பணக் கஷ்டம், தொழில் நஷ்டம், தேக சுகம் பாதிப்பு, நண்பர் தொல்லை.

**சிம்மம்:-** பணவரவு, தொழில் விருத்தி, உறவினர் வருகை, தேக ஆரோக்கியம், தெய்வ தரிசனம்.

**கன்னி :-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், வீண அலைச்சல், நினைத்ததைச் சாதித்தல்.

**துலாம் :-** பணவரவு, தேக ஆரோக்கியம், கடன் வசூல், குடும்பத்தில் மகிழ்ச்சி, வீண் கோபம்.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தேக ஆரோக்கியம், சுற்றத்தார் ஆதரவு, நல்ல செய்கை.

**தனுசு:-** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி.

**மகரம:-** குடும்பத்தில் குதூகலம், பணவரவு, தொழில் விருத்தி, நண்பர் வருகை, தேக ஆரோக்கியம்.

**கும்பம் :-** பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, உடல் நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, தொழில் நஷ்டம்.

**மீனம்:-** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, மன மகிழ்ச்சி, தேக ஆரோக்கியம், தெய்வ தரிசனம்.

# வினாடிவினா போட்டிகளில் பங்குபற்றிய பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவசாயக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டிகள் மூன்று சுற்றுக்களாக நடைபெற்று வருகின்றன. இதில் இரண்டாம் நாள் போட்டியின்

முதற்சுற்றில் :- சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரியும், யா/நல்லூர் இந்து தமிழப்பெண்கள் பாடசாலையும் போட்டியில் பங்கேற்றன. சாவகச்சேரிப் பெண்கள் கல்லூரி 45 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், யா/நல்லூர் 25 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன.

இரண்டாவது சுற்றில் :-

முல்லை உடையார்கட்டு மகாவித்தியாலயமும், முல்லை/பாலிநகர் மகாவித்தியாலயமும் பங்கேற்றன. முல்லை / உடையார்கட்டு மகா வித்தியாலயம் 35 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தையும், முல்லை / பாலிநகர் மகா வித்தியாலயம் 30 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன.

மூன்றாவது சுற்றில் :-

மாங்குளம் / மகாவித்தியாலம் - 45 புள்ளிகளையும், முல்லை / யோகபுரம் மகாவித்தியாலயம் 30 புள்ளிகளையும் பெற்றன.

மூன்றாம் நாள் போட்டியில்

முதலாவது சுற்றில் :- யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் 63 புள்ளிகளையும், யா/இந்து மகளிர் கல்லூரி 33 புள்ளிகளையும் பெற்றன.

இரண்டாம் சுற்றில் :- யா/கொக்குவில் இராமகிருஷ்ணன் வித்தியாலயம் 60 புள்ளிகளையும், யா/விக்டோரியா கல்லூரி 25 புள்ளிகளையும் பெற்றன.

நான்காம் நாள் போட்டியில்

முதல் சுற்றில் - யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் - 82 புள்ளிகளையும், யா/சென்.கென்றிஸ் கல்லூரி இளவாலை - 63 புள்ளிகளையும் பெற்றன.

இரண்டாவது சுற்றில் :- யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை - 35 புள்ளிகளையும், யா/பூநகரி கறுக்காய்த் தீவு மகாவித்தியாலயம் 35 புள்ளிகளையும் பெற்றன.

பாடசாலை மாணவர்கள் இக் கண்காட்சியில் நடைபெறும் கண்காட்சியினைப் பார்வையிடுவதுடன் வினாடி வினாப் போட்டியில் கலந்துகொண்டு பரிசில்களையும் வெல்லமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டு

# உடற்பயிற்சியில் 2 பிரிவில் யாழ். மாவட்டம் முதலிடம்

(பதுளை)

தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியின் பெண்கள் மற்றும் ஆண்கள் பிரிவில் வட மாகாணம் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்டது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் பதுளை காலிகெல மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலையான மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலாமிடத்தையும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டன.

வடமாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில், ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அணி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இக்கல்லூரி தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கடந்த 2007ஆம் ஆண்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த ஆண்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரி இம்முறை நான்காவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. (12)

# வலைப்பந்தாட்டப் போட்டி காலிறுதியுடன் யாழ். அணி

(கொழும்பு)

தேசிய மட்ட வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த யாழ். மாவட்ட அணிகள் காலிறுதி ஆட்டத்துடன் வெளியேறியுள்ளன.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 8ஆம் திகதி நடைபெற்றது.

இதில் வடமாகாணம் சார்பில் பங்குபற்றிய யாழ். மாவட்ட அணிகளில் 15, 17, வயதுப் பிரிவு போட்டிகளில் பங்குபற்றிய அணிகள் முதலாம், இரண்டாம் சுற்றுக்களிலேயே வெளியேற்றப்பட்டன. இருந்தபோதிலும் 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி இரு அணிகளை வெற்றி கொண்டு காலிறுதியாட்டத்திற்குத் தெரிவானது. காலிறுதியாட்டத்தில் களுத்துறை பாலி மகளிர் கல்லூரியுடன் மோதியது. இதில் 31: 26 என்ற கோல் கணக்கில் போராடி யூனியன் கல்லூரி அணி தோல்வியுற்றது. இதன் மூலம் யாழ். மாவட்ட அணி காலிறுதியாட்டத்துடன் வெளியேற்றப்பட்டது.

இம்முறை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியில் இருந்த வீராங்கனைகள் மிகவும் பலம் பொருந்திய அணி என்றும், தேசிய மட்டப் போட்டியில் நிச்சயம் சாதிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது என்றும், இவ்வாறான அணி காலிறுதியுடன் வெளியேறி தேசிய மட்டத்தில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்தது மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் விளையாட்டு ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (12)

# விசன் வெண்கலம்



**தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கும் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவன் விசன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். தேசிய மட்ட பளுதூக்கும் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆனந்தா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 20 வயதிற்குட்பட்ட 80 தொடக்கம் 85 கிலோ கிராம் நிறையுடையோரிற்கான போட்டியில் வடமாகாண அணி சார்பில் கலந்து கொண்ட யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த வீரர் ஏ. விசன் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் 170 கிலோ கிராம் நிறையைத் தூக்கியே மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார் என்பதுடன் யாழ். மாவட்ட அணி இப்போட்டியில் பங்குபற்றுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (12)**

# அலெக்சன் கிண்ணத்தை வென்றன மோகனதாஸ், இந்து இளைஞர்

(மட்டுவில்)

அமரர் அலெக்சன் நினைவு கரப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை மட்டுவில் மோகனதாஸ் மற்றும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகள் கைப்பற்றிக் கொண்டன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய தென்மராட்சிப் பிரதேச மற்றும் யாழ். மாவட்ட மட்ட கரப்பந்து சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் இரவு நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தென்மராட்சிப் பிரதேச மட்ட இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும் மட்டுவில் வளர்மதி அணியும் மோதின.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மட்டுவில் மோகனதாஸ் அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மோகனதாஸ் வீரர் சிவகரன் தெரிவானார்.

தொடர்ந்து நடைபெற்ற யாழ். மாவட்ட மட்ட இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் ஆவரங்கால் மத்தி அணியும் மோதியது. இதில் 3-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக இந்து இளைஞர் அணி வீரர் ரொசான் தெரிவானார். (118)

# அமரர் பிரபாகரன் நினைவு மென்பந்து கிரிக்கெட் அரையிறுதியில் ஞானம்ஸ், வல்வை அணிகள்

(தும்பளை)

அமரர் பிரபாகரன் நினைவு மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் மற்றும் வல்லை அணிகள் தகுதி பெற்றுள்ளன.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தினால் அமரர் பிரபாகரன் நினைவாக 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும், நெடியகாடு அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 99 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் பாலசங்கர் 21, சுகந்தன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன், கிரி தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


பதிலுக்கு ஆடிய நெடியகாடு அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பிரதீபன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் செநதிரன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் ஞானம்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் டயமன்ஸ் அணியும் வல்லை அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் டயமன்ஸ் அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாருஜன் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரொசாந் நான்கு, ரஞ்சித், கெஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய வல்லை அணி 14 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் வெற்றி மூலம் வல்வை அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. (62)

# முன்னாள் போராளி அணி வெற்றி





(மாத்தறை)

மாத்தறைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முன்னாள் போராளிகள் அணி அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள் அணிக்கெதிரான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டி மாத்தறை சனத் ஜயசூரிய விளையாட்டரங்கில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் தலை வர் சனத் ஜயசூரிய தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அமைச்சுகளின் உத்தியோகத்தர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அவ்வணி 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முன்னாள் போராளிகள் அணி 7 ஓவர்களில் ஒரு விக்கெடை மாத்திரம் இழந்து 64 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இப்போட்டி இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

போட்டி முடிவில் சனத் ஜெயசூரிய அனைவருடனும் உரையாடி மகிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ணம் காலிறுதியில் பல்கலை அணி

((யாழ்ப்பாணம்)

ஜெயரூபனின் சிறப்பான அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் கே.சீ.சீ.சீ. வெற்றிக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக அணி தகுதி பெற்றுள்ளது.

கே.சீ.சீ.சீ. விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடாத்தும் 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் தொடர் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டி ஒன்றில் வளர்மதி அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய வளர்மதி அணி 27.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாஜனன் 13, மதன் 34, துஸாந்தன் 27, றஜீகரன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜந்தன் நான்கு, ஜனார்த்தனன் மூன்று, ஜெயரூபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



ஜெயரூபன்

பதிலுக்கு ஆடிய பல்கலைக்கழக அணி 11.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சிறப்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெயரூபன் 87 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் செல்ரன் 21 ஓட்டங்களைப் பெற்றார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை கவிராஜ் கைப்பற்றிக் கொண்டார். (07)


# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் அரையிறுதியில் நடேல், முர்ரே மோதல்


(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் காலிறுதிகளில் வென்ற ஸ்பெயின் வீரர் நடாலும் இங்கிலாந்து வீரர் முர்ரேயும் அரையிறுதியில் மோதவுள்ளனர்..

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளின் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

நடப்பு சம்பியனும், உலகின் இரண்டாம் நிலை வீரருமான ரபெல் நடால் (ஸ்பெயின்) கால் இறுதியில் 21ஆம் நிலை வீரரான ஆண்டி ரோடிக்கை (அமெரிக்கா) எதிர் கொண்டார். இதில் நடால் 6- 2, 6- 1, 6- 3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார்.







அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் மெலினி-ஜேக் (அமெரிக்கா) ஜோடி சம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர்.

நடால் அரை இறுதியில் 4ஆம் நிலை வீரரான ஆண்டி முர்ரேயை (இங்கிலாந்து) சந்திக்கிறார். முர்ரே காலிறுதியில் 7- 5, 6- 4, 3- 6, 7- 6, (7- 2) என்ற கணக்கில் அமெரிக்க வீரர் ஜோன்இஸ்னொரை தோற்கடித்தார்.

மற்றொரு அரையிறுதியில் முதல் நிலை வீரரான ஜோகோவிச் (செர்பியா) மூன்றாம் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) மோதுகிறார்கள். பெண்கள் அரை இறுதியில் கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) - செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), கொபர் (ஜெர்மனி) -சமந்தா (அவுஸ்ரேலியா) மோதுகிறார்கள்.

அரையிறுதி ஆட்டங்களில் முன்னணி வீரர்கள் தகுதி பெற்றுள்ளமையால் இறுதி வரை கடும் போட்டி நிலவும் என விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

## மீண்டும் பெண் குழந்தை

(சிட்னி)


முன்னாள் அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங், மனைவி ரியானா ஜெனிபர் ஜோடிக்கு மீண்டும் பெண் குழந்தை பிறந்துள்ளது.

கடந்த 2002இல் திருமணம் நடந்த இந்த தம்பதியினருக்கு கடந்த 2008இல், எம்மி சார்லோட்டி என்ற பெண் குழந்தை பிறந்தது.

மூன்று ஆண்டுகளுக்குப் பின், இந்த ஜோடிக்கு மீண்டும் பெண் குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தைக்கு மடிசி எல்லி என பெயர் சூட்டியுள்ளனர்.

## டொல்பின்ஸ் அணியில் கிறிஸ் கெய்ல்

(டர்பன்)



தென்னாபிரிக்காவின் உள்ளூர் அணியான டொல்பின்ஸ் அணியில், மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் கப்டன் கிறிஸ் கெய்ல ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

முதல் மூன்று ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்காக விளையாடிய இவர், நான்காவது ஐ.பி.எல்., தொடரில் பெங்களூர் றோயல் சாலஞ்சர்ஸ் அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். தற்போது இவரை தென்னாபிரிக்காவின் உள்ளூர் அணியான டொல்பின்ஸ் அணி புதிதாக ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்காக இவர், விரைவில் தென்னாபிரிக்க பயணம் மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து வெற்றி

(லண்டன்)

இங்கிலாந்து இந்திய அணிகள் மோதிய மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் ஆடிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரவீந்திர ஜடேஜா 78, டோனி 69 ஓட்டங்களைப் பெற்றனர். அண்டர்சன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மழை காரணமாக இங்கிலாந்து அணிக்கு 43 ஓவர்களில் 218 ஓட்ட வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி இங்கிலாந்து அணி 41.5 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கீஸ்வெட்டர் 51, போபரா 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஸ்வின் மூன்று, ஜடேஜா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகன் விருதை ஜடேஜா பெற்றுக் கொண்டார்.

## பயிற்றுநராக ஜெ[illegible] மார்ஷ்?

(கொழும்பு)


இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுநராக பதவியேற்பது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபைக்கும் தனக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரும் முன்னாள் பயிற்றுநருமான ஜெப மார்ஷ் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை அணியின் பயிற்றுநர் பதவிக்கு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுநர் கிரஹம் போர்ட்டின் பெயரும் பரிசீலிக்கப்பட்டது. எனினும் அவர் மறுப்புத் தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பயிற்றுநர் பதவிக்கான தன்னுடனான கலந்துரையாடலில் ஜெப் மார்ஷின் முன்னாள் டெஸ்ட் அணியின் சகாவும் இலங்கை அணியின் முன்னாள் பயிற்றுநருமான டொம் மூடியும் கலந்து கொண்டதாக ஜெப் மார்ஷ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் எதுவும் தீரமானிக்கப்படவில்லை. சம்பிரதாய பூர்வமாக எதுவும் பேசப்படவுமில்லை. நான் கருத்திற் கொள்ளப்படலாம். ஆனால் விடயங்கள் எப்படி நடைபெறுகின்றன என்று பார்க்க வேண்டும் என ஜெவ் மார்ஷ் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஓப்பன் கிண்ணம் செரீனாவுக்கு அதிக வாய்ப்பு



(நியூயோர்க்)

அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு செரீனா வில்லியம்ஸுக்கு அதிகம் இருப்பதாக இவனோவிச் தெரிவித்துள்ளார்.

நான்காவது சுற்றில் செரீனாவிடம் தோலவியடைந்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடின பயிற்சிகள் செய்திருந்தேன். எனது சர்வீசிலும் கூட இப்போது அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கேற்ப, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றபோது அதிக நம்பிக்கை கிடைத்தது. ஆனாலும் தோல்வியடைந்தது ஏமாற்றமாகவே உள்ளது.

ஒவ்வொரு போட்டியிலும் ஒரு சூழ்நிலை நிலவுகிறது. இதற்கேற்ப மற்ற வீராங்கனைகள் போராடினால், கோப்பை வெல்லலாம். என்னைப் பொறுத்தவரை செரினா வில்லியம்சிற்கு கோப்பை வெல்ல அதிக வாய்ப்பு உள்ளது. காயத்தில் இருந்து மீண்டு வந்துள்ள இவர், அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்துகின்றார்.

பல்வேறு வீரர், வீராங்கனைகள் ரென்னிஸ் விளையாடத் தொடங்கியுள்ளனர். சமீபத்தில் விம்பிள்டனில் டோகோவிச் கோப்பை வென்று திரும்பியது, செர்பியாவில் பெரும் எதிர்பார்ப்பைத் தூண்டியது. இதனால், நள்ளிரவில் கூட விழித்திருந்து எங்களது போட்டிகளை தொலைக்காட்சியில் பார்க்கின்றனர். அவர்களிடம் இருந்து தொடர்ந்து ஆதரவு கிடைக்கிறது. சர்வதேச தொடர்களில் சிறப்பாகச் செயற்பட இது ஊக்கமாக அமையும் என்றார்.

## சொந்த மண்ணில் வீழ்த்தவேண்டும்

(லண்டன்)



இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்த வேண்டும் என இங்கிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்துள்ளார்.

தற்போது, ஒரு நாள் தொடரில், ஐந்தாவது இடத்தில் இருக்கிறோம்.

டெஸ்ட் அரங்கில் எப்படி முதல் இடத்தைப் பிடித்தோமோ அதே போல் ஒரு நாள் தொடரிலும் முதல் இடத்தைப் பிடிப்போம். அணியில் இப்போது நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. இதே நிலை தொடர்ந்து நீடித்தால் தான் நாங்கள் சிறந்த அணியாக வலம் வர முடியும்.

இந்திய அணியை, இங்கிலாந்தில் வீழ்த்தியது மட்டும் போதாது, அவர்களுடைய சொந்த மண்ணில் வீழ்த்த வேண்டும் என்ற விருப்பம் உள்ளது. இது விரைவில் நடைபெறும் வாய்ப்பு அதிகம் இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# சதம் பெற்றனர் ஷோன் மார்ஷ், ஹசி 237 ஓட்டங்கள் முன்னிலையில் ஆஸி

(கொழும்பு)

இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஷோன் மார்ஷ், ஹசி ஆகியோரின் சதத்துடன் அவுஸ்ரேலிய அணி 237 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி பல்லேகல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் 264 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி தொடர்ந்தது. நான்காவது விக்கெட்டுக்காக சிறப்பாக ஆடிய மார்ஷ், ஹசி இணை 258 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக நிறுத்தப்பட்டபோது அவுஸ்ரேலிய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஷேன் மார்ஷ் 141, ஹசி 142 ஓட்டங்கைளப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ரண்டீவ் மூன்று, லக்மல் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் நான்காம் நாள் இன்றாகும்.

இதேவேளை, இரண்டாம், மூன்றாம் நாள் ஆட்டங்கள் மழையால் பாதிப்படைந்தமை குறிப்பிடத்தக்கது.



# பழுதடைந்த வாகனங்களுக்கு அடுத்தவாரம் இழப்பீடு



(கொழும்பு)

தரமற்ற பெற்றோல் விநியோகத்தினால் பழுதடைந்த வாகனங்களின் உரிமையாளர்கள் இழப்பீடு பெறுவதற்காக பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க முடியா விட்டால் அதற்குப் பதிலாக சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க முடியுமென பெற்றோலிய தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வினவியதையடுத்தே அமைச்சர் இந்தப்பதிலை அளித்தார். அடுத்த வாரம் அளவில் இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்

# வடமேல் மாகாண மீன்பிடித்துறை அமைச்சருக்கு பிடிவிறாந்து



வடமேல் மாகாண மீன்பிடித்துறை அமைச்சர் சனத் நிஷாந்தாவை கைது செய்யுமாறு சிலாபம் நீதிமன்றம் பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளரின் கடமைகளுக்கு அமைச்சர் இடையூறு ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணைகளுக்கு சமூகமளிக்காத காரணத்தினால், நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

விசேட கடமை ஒன்றிற்கு சமூகமளித்த காரணத்தினால் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை என அமைச்சரின் சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். 2008ம் ஆண்டு பிரதேச செயலாளராக கடமையாற்றிய அதிகாரி தமது கடமையை மேற்கொள்ள முடியாத வகையில் அமைச்சர் நிஷாந்த இடையூறு ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# அரசுக்கு எதிராக செயற்பட்டால் சொத்துக்களை முடக்க புதிய சட்டம்

(கொழும்பு)

அரசுக்கெதிராக சர்வதேச அளவிலும் உள்ளூரிலும் செயற்படுபவர்களின் சொத்துக்களை முடக்கும் வகையிலான புதிய அதிகாரங்கள் அடங்கிய சட்ட ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

வெளிநாடுகளில் புலிகளின் நிதிதிரட்டல், மற்றும் நிதி சார்ந்த நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது என்ற போர்வையில் காவல்துறை அதிகாரிகளுக்கு அரசாங்கம் கூடுதல் அதிகாரங்களை வழங்கவுள்ளது.

இது தொடர்பான இரண்டு சட்டமூலங்களை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இதன்படி உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ அரசுக்கு எதிரான தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் அதிகாரங்கள் காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

உதவி காவல்துறை அத்தியட்சகர் பதவிக்கு மேல் உள்ள அதிகாரிகள் இந்தச் சட்டத்தின் திருத்தத்தின் மூலம் தீவிரவாதத்துக்குத் துணை போனவர்களின் சொத்துக்களை முடக்குவதற்கும் பறிமுதல் செய்வதற்கும் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் அதன் கீழ் வழங்கப்பட்டிருந்த படையினருக்கான அதிகாரங்களை, வெவ்வேறு சட்டங்களின் மூலம் முப்படையினர் மற்றும் காவல் துறையினருக்கு வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# கடமையில் அசிரத்தை காட்டினால் பொலிஸார் மீது சட்டம் பாயும்

(கொழும்பு)

தாக்குதல்களுக்கு இலக்காகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பில் கடமையைச் சரிவர நிறைவேற்றாத பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

கடந்த காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் பல்வேறு தாக்குதல்களுக்கு இல்க்கானதாக ஆணைக்குழுவின் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா கூறினார்.

சட்ட ரீதியான தமது பொறுப்புகளை அரச உத்தியோகத்தர்கள் சரிவர நிறைவேற்றாது விடின் அது அரசியல் அமைப்பின் பிரகாரம் அடிப்படை உரிமை மீறலாக கருதப்படும் என்றும் அவர் குறிப்பிட் டார். பொலிஸார் நியாயமாக நடந்துகொள்ளாத பட்சத்தில் அது தொடர்பாக ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யமுடியும் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் தெரிவிக்கின்றார்

# உலகின் போட்டித் தன்மை நாடுகளில் இலங்கை 52ஆவது இடத்திற்கு முன்னேற்றம்

(கொழும்பு)

உலக பொருளாதார மன்றம் சர்வதேச ரீதியில் மேற்கொண்ட உலகின் போட்டித் தன்மைவாய்ந்த 142 நாடுகள் தொடர்பான ஆய்வில் இலங்கை 52 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. கடந்த வருடம் 62 ஆவது இடத்திலும், அதற்கு முன்னர் 79 ஆவது இடத்திலும் இருந்த இலங்கை இம்முறை 52 ஆவது இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையானது கடந்த வருடத்தின் அதன் தெற்காசிய பிராந்திய அயல் நாடுகளை விட சிறப்பான முறையில் முன்னேறி வருவதாகவும், கிழக்காசிய நாடுகளுடனான வித்தியாசத்தை பெருமளவில் குறைத்திருப்பதாகவும் இலங்கை வர்த்தக சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்தியில் தனியார்துறை கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றமை அவதானிக்கப்பட்டு உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.எனினும் உட்கட்டுமான அபிவிருத்தி வளர்ச்சிப் போக்கை காண்பித்து வரும் நிலைமையில் உயர்கல்வி மற்றும் தொழிலாளர் உரிமைகள் பயிற்சி நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் எதிர்மறையான போக்கினை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.நுன் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுமானால் இலங்கையின் நிலை மேலும் உயர்வடையும் என்றும் வர்த்தக சம்மேளனம் எதிர்வுகூறியுள்ளது

# மோசடியும் ஊழலும் தாராளம் புதிய பொருளாதார கொள்கை வேண்டும்

## குமுறுகிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரச் செயற்பாட்டின் அனைத்து மட்டத்திலும் மோசடியும் வீண்விரயமும் பரவியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க தெரிவிக்கின்றார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைக் குறிப்பிட்டார். தரம் குறைந்த வேலைகளால் நன்மை யாருக்கு என்ற தொனிப்பொருளில் மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க, பொருட்களை கொள்வனவு செய்யும் போதும், கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும் போதும் சேவைகள் வழங்கப்படும் போதும் ஊழலும் மோசடிகளும் இடம் பெறுவதாக குற்றம் சுமத்தினார்.

அரச நிறுவனங்கள் விற்கப்படும் போதும், அரச நிறுவனங்கள் புதிதாக அமைக்கப்படும் போதும் அதற்கான நடவடிக்கைகள் ஊழல் மிக்கதாக அமைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமாயின் சோசலிச கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

# நுகர்வோர் சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை தொடரும்

(கொழும்பு)

நுகர்வோர் சட்டமூலத்தை மீறும்வகையில் செயற்படும் வர்த்தக நிலையங்களை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை, கூட்டுறவு மற்றும் உள்ளகவர்த்தக நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு இனங்காணப்பட்ட பல வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இதுவரை 40 மில்லியனுக்கும் அதிகமாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மரக்கறி மற்றும் பழவகைகளை எடுத்துச் செல்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிளாஸ்டிக் கூடைகள், முறையாகப பயன்படுத்தப்படுகின்றனவா எனவும் அடுத்தவாரம் முதல் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதேவேளை கொழும்பு நகரில் இயங்கும் நட்சத்திர அந்தஸ்துடைய மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

உணவுச் சட்டத்தின் விதிமுறைகளை மீறியமை காரணமாகவே இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்




பிரதீப் காரியவசம் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட திடீர்ச் சோதனையின் போது இந்த மூன்று வர்த்தக நிலையங்களும் உணவுச் சட்ட விதிமுறைகளை மீறியமை கண்டறியப்பட்டதாக அவர் கூறினார்.

# "நானோ" காரில் தீவிபத்து ஆய்வு செய்கிறது நிபுணர் குழு

(கொழும்பு)



கொழும்பில் நானோ கார் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ள நிலையில் இது குறித்து ஆய்வு நடத்துவதற்கு டாடா அதிகாரிகள் குழு ஒன்று கொழும்புக்கு வந்துள்ளது. கடந்த மே மாதம் இலங்கையில் நானோ கார் அறிமுகப் படுத் தப்பட்டது. அதற்குள் இங்குள்ள டாக்சி நிறுவனம் ஒன்று நானோ கார்களை வாங்கி வாடகைக்கு விடத் தொடங்கியது. குறைந்த கட்டணம் கொண்ட நானோ டாக்சி கொழும்பில் அண்மைக்கால மாக பிரபலமாகத் தொடங்கியது.

பட்ஜெட்டாக்சி என்ற பெயர் கொண்ட அந்த நிறுவனத்தில் தற்போது ஏராளமான நானோ கார்கள் வாடகைக்கு விடப்படுகின்றன. இந்த நிலையில் அந்த நானோ கார்களில் ஒன்று கடந்த 2 ஆம் திகதி திடீரென்று தீப்பிடித்து எரிந்துள்ளது. டிரைவர் காரை ஸ்டார்ட் செய்ய முயற்சித்த போது கார் எரிந்துள்ளது. உடனே டிரைவர் காரில் இருந்து இறங்கி ஓடி விட்டார்.

இந்த விபத்துக்கான காரணம் முழுமையாகத் தெரியவில்லை. இது குறித்து ஆய்வு நடத்த டாடா அதிகாரிகள் தற்போது கொழும்புக்கு வந்துள்ளனர். நானோ கார் அடிக்கடி தீப்பிடித்து எரியும் சம்பவங்கள் டாடா நிறுவனத்துக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

# பயங்கரவாதச் சட்டத்தில் திருத்தம் நாடாளுமன்றம் வருகிறது பிரேரணை



(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடாபாக அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாடு எட்டப்படவிருக்கிறது.

இது தொடர்பான பிரேரணை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

நாட்டில் இடம்பெறும் தொடர் அசம்பாவிதங்களே இப் புதிய சரத்துக்களையும் திருத்தங்களையும் தோற்றுவிக்க வேண்டிய கட்டாய நிலைகளைத் தோற்றுவிக்கிறது என அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஸமன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையிலேயே முனனர் அவசரகாலத் தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்ட சிலரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மிக விரைவில் அனைத்துக் கட்சிகளின் சம்மதத்துடன் நாடாளுமன்றில் இது சம்பந்தமாக முழு இணக்கப்பாடு ஒன்று எட்டப்படும் எனவும் அத்துடன் அரசு இந்த விடயத்தில் நடுநிலைமையுடனேயே செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பின் அமைதியான சூழல் இருந்தாலும், அமெரிக்கா கடுமையான சட்ட மூலங்களையே பிரயோகிக்கிறது.

அதேபோலத் தான் இந்தியாவிலும் பொடா சட்டம் நடைமுறையில் உள்ளது. எந்த ஒரு அரசாங்கமும் பாதுகாப்பு விடயத்தில் மிகவும் பொறுப்புடனேயே செயற்படும் என அவர் தெரிவித்தார்.

# 26 இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

நாவலப்பிட்டி, நாகஸ்தென்ன மற்றும் கந்தல்ஓயா தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக கொண்டுசெல்லப்பட்ட 26 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தப் பணம் நேற்றுமுன்தினம் மாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரிஷாந்த ஜயக்கொடி குறிப்பிட்டார்.

தோட்ட அதிகாரி ஒருவர் உட்பட மேலும் இரண்டு பேர் தொழிலாளர்களுக்கான சம்பளத் தொகையை கொண்டு சென்ற போது ஆயுதமேந்திய சிலர் பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கூறியுள்ளனர்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யபபடவில்லை. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுங்கப்பகுதியினர் பறிமுதல் செய்த தங்கம், நாணயங்கள் திருட்டு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு முகாமையாளரது அறையிலிருந்து பல கோடி ரூபா பெறுமதிமிக்க தங்கமும் வெளிநாட்டு நாணயங்களும் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட பெறுமதியான பொருட்களும் இதில் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக விமான நிலைய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். களவாடப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதியை அறிந்துகொள்வதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பு பாதுகாப்பு செயலரின் கட்டுப்பாட்டில்

(கொழும்பு)

இலங்கையில் அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் பாதுகாப்பு, இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பல்லைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கும், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கும் உயர்கல்வி அமைச்சின் செயலரினால் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் பாதுகாப்பு விவகாரங்களை கோத்தாபய ராஜபக்ஷவின் பாதுகாப்புச் சேவையான ரக்ன லங்கா நிறுவனத்திடம் ஒப்படைக்குமாறு அந்தச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் பல்கலைக் கழகங்களின் பாதுகாப்புச் சேவையை இந்த நிறுவனம் பொறுப்பேற்கவுள்ளது.

# சமாதான நீதவான்கள் விபரம் திரட்டப்படுகிறது

(கொழும்பு)

இலங்கையில் முதல் தடவையாக சமாதான நீதவான்கள் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள சமாதான நீதிவான்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் இந்த ஆய்வு நடத்தப் படவுள்ளதாக நீதி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் கே.டி.அரானதார தெரிவித்துள்ளார்.


சமாதான நீதவான்களுக்கு உரிய மரியாதை ஏற்படுத்திக் கொடுக்கவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த ஆய்வு வழிகோலும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

1802 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சமாதான நீதவான்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இது வரையில் இலங்கையின் சமாதான நீதவான்களின் எண்ணிக்கை தொடர்பில் தனியான ஆய்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை. இதேவேளை, அரசியல் ரீதியான காரணங்களுக்காக சில மொழித்திறனற்ற, பொருத்தமற்ற நபர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதேவேளை, வருமானத்தை எதிர்நோக்கும் சில சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டு சமாதான நீதவான்கள் சிலர் தமது பதவியை துஷ்பிரயோகம் செய்வதாகவும் குற்றஞ் சுமத்தப்படுகிறது.

இதனால் சமாதான நீதவான்களுக்கு காணப்படும் சமூக அந்தஸ்து, மரியாதை என்பன வீழ்ச்சியடைந்துள்ளன எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# சிங்கராஜவனப் பகுதியில் வெள்ளைக் குரங்கினம்



(கொழும்பு)

நெலுவை மற்றும் தெனியாய அண்மித்த சிங்கராஜ வனப் பகுதிகளில் ஒருவகை வெள்ளை இனக் குரங்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போதே இந்தக் குரங்கு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

கருங் குரங்குகள் தொடர்பாக நாட்டிற்குள் காணக்கிடைக்கின்ற நான்கு வகைகளில் ஒன்றான தென் மாகாணத்தின் கருங்குரங்கினம் தொடர்பாக காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கம் ஒரு வருடத்திற்கு முன்னர் ஆய்வொன்றை மேற்கொண்டது.

இந்த ஆய்வின் போது சிங்கராஜா வனப் பிரதேசத்தை அணமித்த பகுதிகளில் வெள்ளை இன குரங்குகள் நடமாடுவதை அவதானித்துள்ளதாக பிரதேச கித்துல் பாணி சேகரிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட காலி வனஜீவராசிகள் பாதுகாப்பு சங்கத்தினர் சிங்கராஜ வனத்தின் லங்காகம மற்றும் வத்துகல ஆகிய பகுதிகளில் இந்த வெள்ளைக் குரங்கினங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

# குற்றவியல் சட்டத்தைத் திருத்த கட்சித் தலைவர்கள் இணக்கம்

(கொழும்பு)

குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவிக்கின்றார்.

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பதற்கான கால எல்லையை நீடித்தல் உள்ளிட்ட யோசனைகளுடன் பாராளுமன்றத்தில் நேற்று திருத்தங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும், எதிரக கட்சியினரின் விரோதம் காரணமாக அது தொடர்பான விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

அத்தகையவர்களிடம் விசாரணை மேற்கொள்வதற்காக ஏதேனும் வழிமுறை காணப்பட வேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டினார். இந்த நிலைப்பாட்டிலேயே இருந்து கொண்டு அனைரையும் வெளியில் கொண்டுவர மேலும் ஒரு பிரிவினர் முயற்சிப்பதாகவும் பயங்கரவாதத்தை தூண்டி அதற்கு உதவி புரிந்த தரப்பினரே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறினார்.

# தொடர்மாடி வீடுகள் ஐ.தே.க புது முயற்சி

(கொழும்பு)

கொழும்பு நகரில் உள்ள குறைந்த வசதியுள்ள குடும்பங்களுக்காக அடுக்குமாடி வீடமைப்புத் திட்டம் ஒன்றை செயற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதென கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன கூறினார்.

குறைந்த வசதியுள்ள குடும்பங்களை அங்கிருந்து அகற்றி அவர்களுக்கு வேறு இடங்களில் புதிய வீடுகளை கட்டிக் கொடுப்பதாக அரசாங்கம் கூறியுள்ளபோதும் அரசின் வீடமைக்கும் திட்டம் அடிக்கல் நாட்டுதலோடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் உள்ள மக்களை அரசாங்கம் அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. அரசாங்கத்தின் இத்திட்டத்தை தோல்வியடையச் செய்து அந்த மக்களை கொழும்பை அண்டிய பகுதியில் தங்கவைக்க ஏற்பாடு செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# பொலிஸாரின் ஊழல் மோசடிகள் பொது மக்கள் முறையிட வசதி

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் தகவல் திரட்ட விசேட திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முறைப்பாடு செய்யக் கூடிய வகையில் இந்த புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துளளது. ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு களங்கம் ஏற்படுவதாகவும் இதனை தடுக்கும் நோக்கில் விசேட பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதேவேளை, மோட்டார் போக்குவரத்து, ஊழல் மோசடி மற்றும் குற்ற விசரணை போன்ற பொலிஸ் பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகளினால் கூடுதலான ஊழல் மோசடி இடம்பெறுவதாகவும் இது தொடரபில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் அந்த சங்கம் அறிவித்துள்ளது.

# புதையல் தோண்டிய 8 பேர் விளக்கமறியல்

(கொழும்பு)

அனுராதபுரம் ஒயாமடுவையில் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி நடைபெறவுள்ள காணியில் புதையல் தோண்டியதாக சந்தேகத்தின் பேரில் கைதான இராணுவ வீரர்கள் மூவர் உள்ளிட்ட எட்டு பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் மேலதிக நீதவான் சந்திம எதிரிமான்ன உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் எட்டுப்பேரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட இராணுவ வீரர்கள், ஒயாமடுவை தேசத்திற்கு மகுடம் கண்காட்சி இடம்பெறவுள்ள காணியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்கள் என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்தச் சந்தேகநபர்கள் கடந்த ஏழாம் திகதி இரவு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

# வாழ்வை வளமாக்கும் "நிலைபேறான விவசாயம்"



விவசாயத்திணைக்களத்தினால் திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலைய வளாகத்தில் "இயற்கையுடன் இணைந்த நிலைபேறான விவசாயத்தை நோக்கி" எனும் தொனிப்பொருளிலான ஆண்டிற்கான விவசாயக் கண்காட்சியில் யாழ். குடாநாட்டு மக்கள் மட்டுமன்றி வெளிமாவட்டத்திலிருந்தும் பெருந்தொகையான பொதுமக்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளனர்.

நேற்றுடன் நிறைவடைந்த இக்கண்காட்சியில் விவசாயம் சார்ந்த நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் பாரம்பரிய தொழில்நுட்பங்கள் இயற்கையோடு இணைந்த உற்பத்திகள் உட்பட அறிவியல் சிந்தனைகள், வீட்டுத் தோட்டங்கள் என பலதரப்பட்ட அறிவியல் சார்ந்த விடயங்கள் இக்கண்காட்சி வளாகத்தில் ஏற்பாட்டாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அனுபவம் இல்லாத விவசாயிகள் மட்டுமன்றி பெரும் அனுபவசாலிகளும் விவசாயத்தை மட்டுமன்றி வீட்டுத் தோட்டம், மறுவயல் பயிர்கள், பழப் பயிர்கள், மரக்கறிப் பயிர் செய்கைகள் என்பவற்றை எப்படி மேற்கொள்ளலாம் என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இவ்விவசாயக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பார்வையாளர்களாக விவசாயக் கண்காட்சிக்கு வந்திருந்த தங்களது அனுபவங்கள் மற்றும் கருத்துக்களை தினமுரசுடன் பகிர்ந்து கொண்டனர்.



**அறிவு ஞானப்பிரகாசம்,**
**சாவகச்சேரி.**

கண்காட்சி மிகவும் பிரயோசனமாக இருந்தது. யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் அருமையான சந்தர்ப்பமாக இதனை நான் கருதுகிறேன்.



**நல்லதம்பி கமலநாதன்,**
**வேலணை விவசாயி.**

பலவிதமான விவசாயப் பொருட்களை காண முடிந்தது. எவ்வளவு அனுபவம் இருந்தாலும் மேலதிக அனுபவத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. பாடசாலை மாணவர்கள் மற்றும் விவசாயிகளுக்குப் போதிய அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாது விட்டாலும், புத்துணர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.



**க.மதுஷா,**
**பண்டத்தரிப்பு**
**பெண்கள் உயர்தரப்**
**பாடசாலை.**

இக்கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நான் எதிர்பார்த்த விடயங்களைக் கேட்டறிந்தும், பார்த்தும் தெரிந்து கொண்டேன். நான் இவ்வளவு நாளும் பார்த்திராத விவசாயப் பயிர்களைப் பார்த்து ரசித்தேன்.

இது தவிர நிறையப் பசளைகள் தயாரிக்கும் முறைகளைத் தெரிந்து கொண்டேன். இவ்வாறான சந்தர்ப்பம் அமைந்தது இறைவன் கொடுத்தவரம் என்றார்.



**பா.சிகான்,**
**யாழ்.பல்கலைக்**
**கழகம்.**

கண்காட்சியில் நான் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். இது தவிர பயிர்ச் செய்கைகளின் நுட்பங்கள், பயிர்ச் செய்கைளின் வகைகள் தொடர்பாக அறியக் கூடியதாக இருந்தது.

பொதுவாக இவ்வாறான கண்காட்சிகள் நடத்தப்படுவது வரவேற்கத்தக்கது. மேலும் எனக்கு வீட்டுத்தோட்டம் ஒன்றை உருவாக்க இதிலிருந்து பல விடயங்களைத் தெரிந்து கொண்டேன் என்றார்.

(சுமித்தி)

# காணிகளுக்கான இழப்பீட்டுத் தொகை விரைவுபடுத்த துரித ஏற்பாடு

(கொழும்பு)

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளைப் பொறுப்பேற்கும் போது இழப்பீட்டுத் தொகையை வழங்குவதில் ஏற்படுகின்ற தாமதம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

2012 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக, அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முன்னோடி பேச்சுவார்த்தையின்போது இந்த விடயம் தொடரபில் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள, இடர்முகாமைத்துவம், காணி மற்றும் காணி அபிவிருத்தி, மீள்குடியேற்றம் ஆகிய அமைச்சுக்களின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

பாவனையாளருக்கு விநியோகிக்கப்படும் நீர்க்கட்டணப் பட்டியலைவிட கூடுதலான தொகையை நீர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகத்திற்காக செலவிடப்படுவதாக இதன்போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இந்த விடயம் குறித்து பொதுமக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் குறித்த எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன், நீர் வீண்விரயமாவதைத் தடுப்பதற்கான யோசனைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகளை பொறுப்பேற்கும் போது, இழப்பீடு வழங்குவதில் ஏற்படும் தாமதம் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது கவனம் செலுத்தியதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொன்சேகாவின் பாதுகாப்பு பலப்படுத்துமாறு உத்தரவு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு சிறைச்சாலைக்குள் பாதுகாப்பினை பலப்படுத்துமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தீபாலி விஜேசுந்தர, டபிள்யூ.ரி.எம்.பி.வாரவெவ மற்றும் ஏ.இஸட்.ரசீம் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் வெள்ளைக்கொடி விவகார வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியங்கள் மீளாய்வு செய்யப்பட்டன. சாட்சியங்கள் மீளாய்வுக்கு உட்படுத்துவதற்குரிய விடயங்களை பிரதி சொலிஸ்டர் ஜெனரல் புவனேக அலுவிஹாரே நீதிமன்றத்தில் முன்வைத்த பின்னர் சரத் பொன்சேகா சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி நளின் லத்துவஹெட்டி பொன்சேகாவின் பாதுகாப்புத் தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டார்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வெலிக்கடை சிறைக்கு அழைத்து வரப்படும் புலிச் சந்தேகநபர்கள் சரத் பொன்சேகாவின் சிறைக்கூடத்திற்கு அருகில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நளின் லத்துவஹெட்டி சுட்டிக்காட்டினார்.

பொன்சேகாவின் பாதுகாப்புக்கு இந்த நிலைமை அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் அது குறித்து சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் அவர் நீதிமன்றத்தில் கோரிக்கைவிடுத்தார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிமன்றம் பொன்சேகாவின் சிறைக்கூடத்திற்கு அருகில் புலிச் சந்தேகநபர்களைத் தடுத்து வைப்பதை தவிர்க்குமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டது.

# வெளிநாட்டு பிரமுகர்களுடன் சந்திரிகா பேச்சு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் வெளிநாட்டுப் பிரஜைகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல சிங்களப் பத்திரிகையொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அத்தனகல பிரதேசத்தில் அமைந்துள்ள சந்திரிகாவின் வீட்டில் இந்த இரகசியச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

சந்திப்பில் கலந்து கொண்ட வெளிநாட்டுப் பிரஜைகள் பற்றியோ, சந்திப்பில் என்ன விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்பது பற்றியோ தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும், மிகவும் இரகசியமான முறையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சந்திப்பு ஐந்து மணித்தியாலங்கள் நீடித்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 4 இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

வடக்கில் கொள்ளைச் சம்பவமொன்றுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில நான்கு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் லெப்டினன்ட் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


கிளிநொச்சிப் பிரதேச முகாமொன்றில் கடமையாற்றிய நான்கு இராணுவ வீரர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பழைய இரும்புப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக யாழ்ப்பாணம், பளைப் பிரதேசத்திற்குச் சென்ற வர்த்தகர்களுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்ட இராணுவத்தினர், குறைந்த விலையில் பழைய இரும்பு வகைகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

பழைய இரும்புப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பணத்துடன் சென்ற வர்த்தகர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கி அவர்களிடமிருந்த பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட பணம், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தினர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# ஊனமடைந்த படையினருக்கு புதிய வீடுகள் நிர்மாணம்



(கொழும்பு)

போர் இடம்பெற்ற காலத்தில் 23,287 படைவீரர்கள் காயமடைந்துள்ளதாகவும், அவர்களுக்குப் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் தினேஸ் குணவர்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

போரின் போது ஊனமுற்றவர்களில் 21,327 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள், 430 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள், 234 பேர் விமானப்படையைச் சேர்ந்தவர்கள், 1296 பேர் காவல துறையைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை ஊனமுற்றவர்களில் 3,303 படைவீரர்களுக்கு புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 15,000 ஊனமுற்ற படைவீரர்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை முழுமையாக நிர்மாணிப்பதற்கு வட்டியில்லாக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.



# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய இரதோற்சவ சிறப்பு மலர் - 2011

## சரித்திர வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் சந்நிதிக் கந்தன் தேரேறி வரும் திருக்காட்சி அற்புதமானது



ஈழமணித் திருநாட்டின் தென்பால் கதிர்காமக் கந்தனுடைய ஆலயம் விளங்குவது போல வடபால் செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகிறது. அன்னதானக் கந்தனாக தொண்டைமானாறு ஆற்றங்கரையினிலே அருளாட்சி செய்து வருகின்ற சந்நிதிக் கந்தனின் கரவருஷத்திற்கான மஹோற்சவப் பெருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்று இன்றைய தினம் அன்னதானக் கந்தனின் தேர்த் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

இன்றைய தேர்த் திருவிழாவிலே ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வேற்று நாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்கள் செல்வச் சந்நிதியில் கூடுகின்ற கண் கொள்ளாக் காட்சியைக் காண முடிகிறது.

கதிர்காமத்திலே காவடிக் கந்தனாகவும், மாவிட்டபுரத்திலே அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரிலே அலங்காரக் கந்தனாகவும் அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற முருகப் பெருமான் செல்வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாக ஆற்றங்கரையானாக வீற்றிருந்து எமக்கெல்லாம் வாழ்வளித்துக் கொண்டிருக்கின்றான்.

### பழந்தமிழர் பண்பாட்டில் வழிபாடு

செல்வச்சந்நிதி பழந்தமிழர் பண்பாட்டின் சின்னமாக அமைந்துள்ளது. பண்டைத்தமிழ் இலக்கியங்களாகிய சங்க நூற் செய்யுள்களைப் படிப்பவர்கள் அக்கால தமிழ் மக்களுடைய பூர்வீக வாழ்வு வரலாற்றைக் கண்டு கொள்வர். வட இலங்கையில் வடமராட்சிப் பகுதியில் தொண்டைமானாறு எனும் புராதன நகரம் உண்டு. கருணாகரத் தொண்டமான் எனும சிற்றரசருடன் தொடர்புபூண்ட நகரம். இப்பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. தொண்டைமானாற்றங்கரையில் சுழிமுகத்திற்கு அண்மையில் செல்வச்சந்நிதி முருகன் கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலுக்கு சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை எனும் பெயர்கள் உண்டு. கோயிலின் சூழலின் இயற்கை அழகு எல்லோரையும் ஈர்ப்பது மருத மரக் காடும், பாக்குநீரிணைக் கடலும் மருங்கே காணும் வயலும் இடையே கிழக்கே கிடக்கும் வல்லைவெளியும் திணை ஒழுக்கம் காட்டும்.

### அற்புதமான பூவரசமரம

செல்வச்சந்தியில் அந்தணர் அல்லாதோர் பூசை நடாத்துகின்றனர். இவ்வாலயத்தினில் இருக்கின்ற அற்புதச் சிறப்புக்களிலொன்று கோயிலின் உள்வீதியில் மேற்குப் புறமாக புரதானமான பூவரசமரமொன்றைக் காணலாம். இது மிகவும் பழைய மரமென்பதற்கு ஐயமில்லை. இது ஒரு பெரிய தவசி ரேஷ்டர் சமாதியான இடத்தின்மீது நிழல் தருமரமாக காட்சியளிக்கின்றது. சில சமயங்களில்இதன் இலைகள் யாவும் உதிர்ந்து மரமே பட்டுவிட்டதுபோல இருக்கும். ஆனால் எதிர்பாராதவிதமாக அழகிய குடைவிரித்து இருப்பதைப்போல சடைத்து வளர்ந்து பச்சிலைகளைத்தள்ளி சமாதிக்கு நிழல்தரு விருட்சமாக காட்சியளிக்கும். இது ஒரு அற்புதமான விருட்சமென்று இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

### பூசை முறை

தொண்டைமானாறு செல்வச்சந்தியில் நடக்கும் வழிபாட்டிற்கும் கதிர்காமத்தில் நடக்கும் வழிபாட்டிற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. இரு ஆலயங்களிலும் வேதாகமமுறையிலான வழிபாடு இல்லை. பூசைகளில் மந்திரங்கள் இடம் பெறுவதில்லை. வேறு எந்தக் கோவில்களிலும் காணப்படாத சடங்கு முறையே சந்நிதியில் காணப்படுகின்றது.

கதிர்காமத்து கொடியேற்ற நாளில் சந்நிதி முருகன் கதிர்காமம் செல்வதாகவும் பின்னர் கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவன்று சந்நிதி திரும்பி வருவதாகவும் சடங்குகள் செய்யப் படுகின்றன.

### கதிர்காமரும் முருகப் பெருமானும்

ஒரு நள்ளிரவு சுவாமி, பூசாரி கதிர்காமரை நித்திரையிலிருந்து எழுப்பி "அப்பா நான் பாத யாத்திரையாக வந்தமையால் பசி, தாகம் அதிகரித்துள்ளது. ஏதும் உண்பதற்குக் கொடு என்று கேட்டாராம்" கதிர்காமர் இவ்வேளை நான் தங்களுக்கு அமுது படைக்க எங்கு போவேன் என்று மனம் நொந்தார். முருகன், உள்ளம் இருக்கும் சிறிதளவான பயற்றை துவைத்து இளநீரும் தா என்று கேட்டுவாங்கி திருவமுது செய்தார். இன்று அவ்விதம் பயற்றம் உருண்டையும் இளநீரும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வருகின்ற பூசகருக்குப் படையல் செய்து வருவது நடைமுறையில் உள்ளது.

### பக்திப் பரவசம

சந்நிதியில் பூசை நேரத்தில் பறை ஒலிக்கப்படும். அப்பறை ஒலி அன்பர்களைப் பரவசப்படுத்தும். நிறைந்த கற்பூர ஒளியிலும் செறிந்த புகை மண்டல நடுவிலே மின்னலைப் போல ஒளிரும் வேலின் தோற்றம் கண்டு பரவசப்படதார் மனிதர் களேயன்று.

### சந்நிதிக் கந்தனின் தேர்விழாவின்போது.....

"மெய்தான் அரும்பி விதிர்விகிர்த் துன்விரை
யார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்றும்
கைதான் நெகிழ விடேன் உடையா யென்னைக் கண்டு
கொள்ளேன்"

எனும் திருச்சதகச் செய்யுளுக்கு இணங்க உடலெங்கும் மெய்சிலிர்த்து நடுநடுங்கி கைகளை சிரமேற்குவித்து வைத்து கண்களில் இருந்து கண்ணீர் வடிய மனமுருகி வாய் முருகா முருகா என்று இயம் நின்று அன்பர்கள் வணங்கும் காட்சி அற்புத காவடி நிலையைத் தோற்றிவிக்கும்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புக்களோடு நல்லருள் பாலிக்கும் சந்நிதிக் கந்தன் அழகிய சித்திரத் தேரேறி வருகின்ற திருக்காட்சி வடபுலத்தையே அணி செய்கின்றது. சந்நிதிக்கந்தனின் நேர்த்தியினை நிறைவேற்றும் பொருட்டு கந்தனின் வீதியில் பாற்காவடி, சந்தனக்காவடி, பன்னீர்க்காவடி, புஷ்பக்காவடி, ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி, செடிற்காவடி, முள்ளுமிதித் தடிக்காவடி, பறவைக்காவடி, அந்தரக்காவடி, பிள்ளைக் காவடி, பிரதட்டைக்காவடி ஆகியன தேரோட்டத்தைப் பக்திப் பரவசமாக்கும்.

எல்லாம்வல்ல சந்திக் கந்தன் தேரேறி எல்லோருக்கும் எல்லா நன்மைகளையும் அருள வேண்டுமென நாமனைவரும் பிரார்த்திப்போமாக.

செந்தமிழ் கலைஞானி, வர்ணனைக் கலாநிதி, மதுரகவி,
காரை. எம். பி. அருளானந்தன் J.P
(பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வச்சந்நிதிக் கந்தனுக்கு இன்று தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. ஆற்றங் கரையில் வேலவனாக எழுந்தருளி அருள் பாலிப்பவன் செல்வச்சந்நிதிக் கந்தன். ஆவணிப் பௌர்ணமியை தீர்த்தோற்சவமாகக் கொண்டு பதினைந்து தினங்களும் அன்பைப் பெருக்கி ஆனந்தத்தைச் சேர்க்கும் உற்சவங்களாக அமையும். எவரும் எப்படியும் தொழுது வழிபடலாம் என்ற அருட்பாங்கில் சந்நிதிக் கந்தனின் ஆலயம் தொண்டைமானாறில் பழம்பெரும் ஆலயமாக விளங்குகின்றது.

சங்காரத் தொழிலாக தேர்த்திருவிழா அமைகின்றது. ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி நிறைவேற்றப்படும் பக்திப் பெருவிழாவில் ஏராளமான அடியவர்கள் முருகனை வேண்டி, நேர்த்தி செய்து வழிபாடு செய்கின்றார்கள். இன்றைய நாளில் முருகன் தேரேறி அனைவருக்கும் பல்வகைச் சிறப்புக்களையும் சேர்த்து மண்ணில் அவர்களை நல்ல வண்ணம் வாழ்விக்க முருகனைப் பிரார்த்தித்து எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீனம்.

## குருபீடாதிபதியின் ஆசிச் செய்தி



இன்று செல்வச்சந்நிதிக் கந்தனின் இரதோற்சவ நன்நாள். பக்த அடியார்களின் துன்ப துயரங்களை அழித்தொழிக்க முருகப்பெருமான் தேரிலே ஆரோகணிக்கின்றான். பிரம்மோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். ஆகவே தமிழ்ப் பெருங்கடவுளான கந்தப் பெருமான் தமிழ்ப் பெருங்குடி மக்களின் துன்ப, துயரங்களைப் போக்குவதற்காக தேரிலே ஆரோகணிக்கின்றான். அழகான சித்திரத் தேரிலே பவனிவரும் சந்நிதிக் கந்தன் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென இறையாசி வேண்டிப் பிரார்த்தித்து அருளாசிகளை வழங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

சிவஸ்ரீ சோம கந்த தண்டபாணி தேசிகர் J.P,
குருபீடாதிபதி, அ. உ. சைவக்குருமார் சம்மேளனம்,
பிரதம குரு, முத்துமாரி அம்மன் கோவில் வல்லை.

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துபவர்கள்

தேரேறி வரும் முருகா தீவினைகள் களைந்திடுவாய்
**அம்பாள் மரக்காலை**
இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0214921012
0777111147
(C/936)

அன்னதானக் கந்தனின் அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கும்...
**நெல்லியடி செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை**
நவநாகரீகத்திற்கு ஏற்றவிதத்தில் அழகிய டிசைன்களில் திருமணப் பட்டுப்புடைவைகள் மலிவாகவும் மனம் நிறைவாகவும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேயிடம்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 0212263238
(C/935)

தேரேறும் முருகனே! நல்லருள் தந்திடுவாய்
**அனுஷா பந்தல் சேவை**
உங்களின் மங்களகரமான நிகழ்வுகளிற்கு முத்துச்சப்பரம், அன்னச் சோடனை மற்றும் இதர சோடனைகளிற்கு நாடுங்கள்.
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
தொ.பே: 0779789467
(C/927)

வடம்பிடித்து கந்தனருள் பெற்றிடுவோம்.
**துர்க்கா பொத்தகச் சோலை**
நூல்களுக்கான பணம் செலவல்ல சேமிப்பே!
பஸ் நிலையம், சுன்னாகம்.
(C/931)

**C.L. பல்மூக்குக் கண்ணாடியகம்**
மிதப்புப் பற்களுக்கு உறுதிமிக்க பற் கிளிப்புகளைப் பொருத்திக் கொள்ளலாம்.
ஏ-9, வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
58, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228893
(C/925)

சந்நிதி முருகனின் நல்லருள் பரவ பிரார்த்திக்கும்.
**நியூசோதி நகைத் தொழிலகம்**
மனம்கவரும் தங்க நகைகளின் சாம்ராஜ்யம்
இல.64, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் (பஸ் நிலையம் அருகில்).
தொ.பே: 0718946461
(C/937)

சந்நிதியான் அருள்வேண்டிப் பிரார்த்திக்கும்
**நாதன் பிறதர்ஸ் பல்பொருள் வாணிபம்**
உங்கள் அனைத்துப் பல்பொருள் தேவைகளிற்கும்.
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
(C/926)

சந்நிதி முருகனின் அருள்கிடைக்கப் பிரார்த்திக்கும்
**சரவணா ரெக்ஸ்**
கிளை I
நல்லூர் பின் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1723
கிளை II
கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 0421
(C/939)

அன்னதானக் கந்தனின் தேர் உற்சவம் சிறப்புற பிரார்த்திக்கும்
**செல்வ விநாயகர் கிறீம் ஹவுஸ்**
உங்களின் வைபவங்களிற்கு பொம்பே சுவீற்ஸ் ஓடர் செய்து கொடுக்கப்படும்.
பஸ்நிலையம் அருகில், சுன்னாகம்.
தொ.பே: 0776328725
(C/938)

அன்னதானக் கந்தனின் தேர் உற்சவம் சிறப்புறப் பிரார்த்திக்கும்...
**சுசிலா ரெக்ஸ்**
நவ நாகரீக ஆடைத் தெரிவுகளிற்கு நாடுங்கள்.
பஸ் நிலையம் அருகாமை, சுன்னாகம்.
(C/929)

# இந்திய மத்திய அரசாங்கம் நம்பகத்தன்மை இழந்துவிட்டது

## பா.ஜ.க. தலைவர்கள் வலியுறுத்து

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு நம்பகத்தன்மையை இழந்துவிட்டது. அதனால்தான் மத்திய அரசுக்கு எதிரான உணர்வு மக்களிடம் ஏற்பட்டுள்ளது என பா.ஜ.க தலைவர்கள் சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய அரசுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயான கருத்து வேறுபாடு களே சமீபத்தில் முடிந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பிரதானமாக இருந்தது.

கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்தே மத்திய அரசு தன்னிச்சையாக நடந்துகொண்டது. அதனால் அரசில் உள்ள சில மூத்த அமைச்சர்களுக்கே கசப்புணர்வு ஏற்பட்டது.

மழைக்கால கூட்டத் தொடரின்போது நடவடிக்கைகள் திட்டமிட்டபடி நடைபெறாமல் போனதற்கு மத்திய அரசுதான் காரணமே தவிர எதிர்க்கட்சிகள் அல்ல.

அனனா ஹசாரே போராட்டத்தைக் கையாளுவதில் மத்திய அரசுக்குள்ளேயே கருத்து வேறுபாடு காணப்பட்டது. இந்த விவ காரத்தில் காங்கிரஸ் கட்சிக்கும், மத்திய அரசுக்கும் இடையேயான கருத்து வேறுபாடும் அம்பலத்துக்கு வந்தது.

விளையாட்டுத் துறை தொடர்பான மசோதா குறித்து மத்திய அமைச்சர வைக் கூட்டத்திலேயே கருத்தொற்றுமை இல்லை.

மனித ஆற்றல் மேம்பாட்டு அமைச் சகம் சார்பாக அமைச்சர் கபில் சிபல் தாக்கல் செய்த மசோதாவுக்கு எதிராக காங்கிரஸ் உறுப்பினர்களே எதிர்ப்புத் தெரிவித்தனர் என்று அவர்கள் கூறினர். ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் உட்கட்சிப் பிரச்சினை காரணமாக, நாட்டின் வெளியுறவுக் கொள்கை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது எனத் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பின் போது, பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களான எஸ்.எஸ். அலுவாலியா, ஷா நவாஸ் ஹைசைன், பா.ஜ.க தேசிய செய்தித் தொடர்பாளர்கள் ராஜீவ் பிரதாப் ரூடி, நிர்மலா சீதாராமன் ஆகியோர் இருந்தனர்.

# உள்ளூராட்சித் தேர்தலில் வை.கோ. தனித்துப் போட்டி

(சென்னை)

உள்ளூராட்சித் தேர்தலில் ம.தி.மு.க., தனித்து போட்டியிடும், என்று கும்பகோணத்தில் அக்கட்சியின் பொதுச்செயலர் வை.கோ, தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று முன்தினம் அவர் உரையாற்றுகையில்,

வரும் உள்ளூராட்சி தேர்தலில், தி.மு.க., மற்றும் அ.தி.மு.க., கட்சிகளுடன் கூட்டணி அமைக்காமல், ம.தி.மு.க. தனித்துப் போட்டியிடுகிறது. மக்கள் மன்றத்தில் தற்போது, ம.தி.மு.க. வுக்கு நல்ல ஆதரவு பெருகி வருகிறது. முல்லைப் பெரியாறு அணை, மற்றும் ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினையில் ம.தி.மு.க.வின் செயற்பாடுகள் மக்களுக்கு தெரிகிறது.



இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆரம்பகாலத்திலிருந்து, ம.தி.மு.க., ஒரே நிலையில் இருந்து வருகிறது.

இலங்கை தமிழர்கள் படுகொலைப் பிரச்சினைகளை பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் தெரியப்படுத்தும் நோககில், ஒரு இலட்சம் சி.டி.க்கள் தயாரித்து விநியோகிக்கப்பட்டு வருகிறது. திருச்சி மேற்குத் தொகுதி இடைத்தேர்தலில் ம.தி.மு.க., போட்டியிடவில்லை எனத் தெரிவித்தார்.

## சிதம்பரத்தின் உருவ பொம்மையை எரிக்க முயன்ற நால்வர் கைதாகினர்

(புதுடில்லி)

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தின் உருவபொம்மையை எரிக்க முயன்ற பாரத்சேனா என்ற இந்து அமைப்பைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து அந்த உருவபொம்மையை பொலிஸார் கைப்பற்றினர்.

புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப் புக்குக் கண்டனம் தெரிவித்தும், பயங்கரவாதச் செயல்களைத் தடுக்கத் தவறியதற்காக ராஜினாமா செய்யக் கோரியும் ப.சிதம்பரத்தின் உருவபொம்மையை எரிக்கும் போராட்டம் நடத்தப் போவதாக பாரத் சேனா அமைப்பு அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து கோவை முழுவதும் பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருந்தனர். இதன்போது பொம்மையை எரிக்க முயன்ற இவர்கள் கைதாகியுள்ளனர்.

# பாலச்சந்தருக்கு பால்கே விருது தனுஷிற்கு சிறந்த நடிகர் விருது



(புதுடில்லி)

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 58 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல், பழம்பெரும் தமிழ்திரைப் பட இயக்குனர் கே.பாலச்சந்தருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதான தாதா சாஹேப் பால்கே விருதினை வழங்கினார்.

சிறந்த திரைப்பட கலைஞரகளுக்கு ஆண்டுதோறும் தேசிய விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்ச்சி டெல்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் கலந்து கொணடு கலைஞர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

கே.பாலச்சந்தருக்கு விருதுடன் தங்கத் தாமரையும், ரூ. 10 இலட்சத்திற்கான ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது. மேலும் ஜனாதிபதி, பாலச்சந்தருக்கு பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தார்.


2010 ஆம் ஆண்டின் சிறந்த நடிகருக்கான விருதை நடிகர் தனுஷ் பெற்றார்.

அவர் விருதை ஜனாதிபதியிடம் இருந்து பெற்ற போது அவரது மனைவி ஐஸ்வர்யா தனுஷ் எழுந்து நின்று கரகோஷம் செய்தார். தனுசுக்கு விருதுடன் வெள்ளித்தாமரையும், ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டது.

சிறந்த நடிகைக்கான விருது நடிகை சரண்யாவிற்கும், சிறந்த டைரக்டர் மற்றும் சிறந்த திரைக் கதைக்கான விருதுகளை வெற்றி மாறனுக்கும், சிறந்த எடிட்டருக்கான விருதினை கிஷோருக்கும், சிறந்த நடன அமைப்பாளருக்கான விருதினை தினேஷ் குமாருக்கும், சிறந்த துணை நடிகருக்கான விருதினை தம்பி ராமையாவிற்கும், நடிகருக்கான சிறப்பு விருதினை இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளரும் நடிகருமான ஜெயபாலனுக்கும், சிறந்த கவிஞருக்கான விருதினை கவிஞர் வைரமுத்துவிற்கும் ஜனாதிபதி வழங்கினார்.

# மெய்தான் பாருங்கோ...

## இழப்பதற்கு எதுவுமில்லை



கிழமைக்கொருக்கா இந்தப் பக்கத்தாலை வந்தால் பலதும் பத்துமா உங்களோட சில விசயங்களைப் பறைஞ்சுபோட்டுப் போன எனகு, கொஞ்ச நாளா வரேலாமல் போச்சுப பாருங்கோ. அது ஏனெண்டு கேட்கிறியளே...?

போர் முடிஞ்சு ரண்டு வருசமாகின பின்னாலயும் இன்னமும் மீள்குடியேற்றம் எண்டது மந்த கதியிலதான் நடக்குது. கட்டம் கட்டமாய் சனத்தை மீள்குடியேற்றம் செய்ய, முகாமில எஞ்சியிருக்கிற சனங்களுகது வாழ்க்கையில ஒரு வெறுப்பும் விரக்தியும் வளர்ந்து நிக்கிறதைக் காணக்கூடியதாக இருக்குது பாருங்கோ.

இப்ப கிட்டடியில மீள்குடியேற்றம் எண்டாப்போல நான் யாழ்ப்பாணத்திலிருந்து அவசரமா செட்டிகுளத்துக்குப் போனன். அங்கை புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியைத் தான் ஏத்துவினம் எண்டு அறிஞ்சதும் எனக்கு வாழ்க்கையே வெறுத்துப்போச்சுது. ஏனெண்டால் நான் இருக்கிறது முதலாம் வட்டாரம். அந்தப் பகுதியில இப்ப மீள்குடியேற்றம் இல்லையெண்டதும், உடன என்ர மனிசி கோம்பாவில் இரண்டாம் வட்டாரத்தில இருக்கிற தன்ர தங்கச்சியின்ர மகளின்ர வீடொண்டுக்கு அட்ரெஸ்சை மாத்திக்குடுத்ததால மீள்குடியேற்றமாப் போக முடிஞ்சிருக்குது.

செட்டிகுளம் முகாமைவிட்டு வெளிக்கிடேக்கை, வெளிக்கிடுகிற சனங்களுக்கு மெத்தப் புளுகம் பாருங்கோ. பின்னைச் சும்மாவே...! ரண்டு வருசத்துக்கு மேலாக முள்ளுக்கம்பிகளுக்குள்ள முடங்கிக்கிடந்ததுகளுக்கு ஊருக்குப் போறம்... எங்கட வீடுவாசல்களைப் பாக்கப்போறம்... எண்ட சந்தோசம் முகத்தில வழிய, ஊர்போய்ச் சேந்தாச்சு. நாங்கள் போறநேரம் இரவாகிப்போச்சுது. கோம்பாவில் - விக்கினேஸ் வராப் பள்ளிக்கூடத்தில தங்கவைச்சிட்டு, அடுத்தநாள் ஆமிக் காரர் தங்கட பதிவுகளையெல்லாம் முடிச்சுப்போட்டு, கொண்டு வந்த சாமான்களை ரக்டரில ஏத்தி அவரவர் வீட்டுக்கு அனுப்பி வைச்சினம்.

ஆனா, வீட்டைபோனா...? கடவுளே! வீடு வீடு மாதிரியே இருந்தது. கூரை உக்கி மழைத்தண்ணி ஒழுகினதால மண்சுவர் எல்லாம் கரைஞ்சு நிலத்தில பாறிப்போய்க் கிடந்தது. வீட்டைச் சுற்றி நாயுண்ணிச் செடி தலைக்கு மேலால வளந்து நிண்டுது. நிலத்தில குப்பையும் கஞ்சலும். என்ர மனிசி வீடு மாறி வந்திட்டமோ தெரியாதெண்டு ஒழுங்கையடியில நிண்டுகொண்டு என்னைச் சுத்திச்சுத்தி வந்துகொண்டிருந்தாள். எனக்கு அவளைப் பாக்கப் பாருங்கோ பாவமாக்கிடந்தது. இஞ்சாரப்பா... இது அவள் பிள்ளையின்ர வீடுதான். அங்கை பார் முத்தத்தில அம்பலவி மாமரம் நிக்குது.... எண்டு அவளுக்கு தெளிவுபடுத்தினாபிறகு தான் அவள் நம்பினாள். இப்பிடி எங்களுக்கு மட்டுமில்லைப் பாருங்கோ, புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியில குடியேறின சனங்கள் எல்லாத்துக்கும் தான். அங்கினேக்கை ரண்டொரு கல் வீடுகள் தான் ஏதோ தப்பிப் பிழைச் சிருக்குது.

ரண்டு வருசத்துக்கு முன்னம் வன்னியில சண்டை நடக்கேக்கை, கடைசியா புதுக்குடியிருபபில தான் பாருங்கோ நல்ல உச்சமா அடிபாடு நடந்தது. அப்ப சனங்கள் ஏற்கனவே எழும்பிப் போயிட்டதால, ஒண்டும் தெரியேல்ல. இப்ப அவரவர் தங்கட வீடுகளை வந்து பாக்கத்தான் அதன் தாற்பரியம் நல்லா விளங்குது.

இதை நான் ஏன் சொல்லவாறன் எண்டால், சும்மா பொழுது போறதுக்காக புலம்பிக்கொட்ட வரேல்லை. போருக்கை அம்பிட்டவன்... அந்தப் போரால அங்கங்குறைபாட்டுக்கு ஆளானவன்... அகதி வாழ்க்கை வாழ்ந்தவன்... சொந்த பந்தங்களைச் சாகக் குடுத்தவன்... இப்பிடி எத்தனையோ அவலங்களைச் சுமந்து வாழ்ந்தவன்.. வாழ்ந்து கொண்டிருப்பவன்.. எண்ட ரீதியில நானும் என்னைப் போல எத்தனையோ சனங்களும் சீவிச்சுக் கொண்டிருக்க, இப்பவும் அடிபாட்டு அரசியலை உசுப்பேத்துற ஆட்களுக்கு எங்கட சனங்கள் வோட்டுப்போட்டு ஆதரிச்சிருக்கினம் பாத்தியளே.

இதிலயிருந்து என்ன விளங்குது உங்களுக்கு...?

ஆரெவன் செத்தாலும் பரவாயில்லை. திரும்பவும் ஒரு சண்டை தொடங்கவேணும்... கிபிர் குண்டுபோடவேணும்... ஆமி ஷெல்லடிக்க வேணும்... சனங்கள் சாகவேணும்... எல்லாரும் இடம்பெயரவேணும்... இன்னொரு முள்ளிவாய்க்கால் முளைவிட வேணும்... எண்டுதானே உந்தச் சனங்கள், கையில் உடுக்கெடுத் தடித்து, தங்களை உசுப்பேத்தி ஆட்டுற போலி (ஆ)சாமிகளுக்கு ஆதரவளிச்சிருக்கினம்.

தமிழனுக்கான இன உணர்வெண்டதை நாங்கள் இந்த இடத்தில இந்த நேரத்தில தான் விளங்கிக்கொள்ள வேணும் பாருங்கோ!

வன்னியில தமிழன் போரால பாதிக்கப்பட்டு போக்கிடமில்லாமல் அலையுறதையும் பாத்திட்டு, அதே போர் மூலம் தங்கட பார்லிமெண்டு இருப்புகளைத் தக்க வைக்கிற கூத்தாடிக் கும்பல்களை இன்னொரு தமிழன் ஆதரிக்கிறான் எண்டால், போரால பாதிக்கப்பட்ட தமிழன் அடிபாட்டை ஆதரிக்கிற அந்தத் தமிழனை 'துரோகி' எண்டு சொல்லலாம் தானே.

குண்டுச் சட்டிக்குள்ள நிண்டு குதிரை ஓடுறதைவிட, கொஞ்சம் வெளியுலகத்தையும் பாத்தாத்தானே உண்மை விளங்கும். போரை ஆதரிக்கிறவையும், அந்தப் போர் மூலம் ஆதாயம் தேட நினைக்கிறவையும் இப்ப ஒருக்கா வன்னிப்பக்கம் அதுவும் அடிபாடு உச்சமா நடந்த புதுக்குடியிருப்புப் பக்கம் வந்து பாத்தினமெண்டால் இனியொரு சண்டை மூலம் அல்லது அரசாங்கத்தை எதிர்க்கிறதுமூலம் தாங்கள் நினைக்கிற அதிகாரப் பகிர்வை வேண்ட முடியுமோண்டது விளங்கும். சாகிறவன் சாகட்டும். எங்கட சந்ததி நல்லாயிருந்தால் காணும் எண்டு எங்கட வன்னிச்சனம் நினைக்கிற அளவுக்கு இல்லை. ஏனென்டால் இனி எங்களிட்டை இழக்கிறதுக்கு எதுவுமேயில்லை. அதுதான் உண்மை.

- சின்னக்குட்டி சின்னச்சாமி

உலகச் செய்திகள்

# ஓசாமா பின்லேடன் இருந்த வீட்டை படம் பிடித்த பத்திரிகையாளர் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், ஒசாமா பின் லேடன் தங்கியிருந்த வீட்டை படம் எடுத்த, சீனப் பத்திரிகையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒசாமா பின்லேடன் தங்கியிருந்த இடம், தற்போது பொது மக்கள் செல்லத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை மீறி, சமீபத்தில் டென்மார்க் நாட்டு தூதரக அதிகாரியும், அவரது மனைவியும் அங்கு சென்றபோது, பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களைக் கைது செய்து, பின் விடுவித்தனர்.

இதேவேளை, சீனப பத்திரிகையாளர் மற்றும் இரண்டு பாகிஸ்தானிய பத்திரிகையாளர்கள், நேற்று முன்தினம் இந்தப் பகுதிக்குள் நுழைந்து, ஒசாமா தங்கியிருந்த வீட்டை படம் எடுத்துள்ளனர். இதையடுத்து, மூவரும் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானியப் பத்திரிகையாளர்கள், நவான் ஷெர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். சீன பத்திரிகையாளர், அருகில் உள்ள விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளார். அவரிடம் பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர்.

# செப்டெம்பர் 11 தாக்குதலின் 10ஆம் ஆண்டு நினைவு இன்று

## இருமடங்கு பாதுகாப்புக்கு ஒபாமா உத்தரவு



(வொஷிங்டன்)

அமெரிக்காவில், இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட, 10ம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஸ்டிக்கப்படுகிறது. இதனையொட்டி, இரு மடங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி, அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்தின், 10ம் ஆண்டு நினைவு தினம், இன்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி, மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தப் போவதாக, சில அனாமதேய தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. இதைப் பொருட்படுத்தாவிட்டாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இரு மடங்கு பாதுகாப்புடன் செயற்படும் படி, பாதுகாப்பு அதிகாரிகளுக்கு, அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார். மக்களும் விழிப்புணர்வோடு நடந்து கொள்ளும் படி, நியூயோர்க் மேயர் மைக்கேல் பளும்பர்க் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த 2001-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் இரண்டு விமானங்களைக் கடத்திச் சென்று அமெரிக்காவின் பொருளாதார நகரான நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையமான இரட்டை அடுக்குமாடிக் கட்டிடத்தை மோதித் தகர்த்தனர். தலைநகர் வொஷிங்டனிலும் தாக்குதல் நடத்தினர். இதில் ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள் மற்றும் உலக பொருளாதாரமே சரிந்தது.

# சீனாவில் ஏழை மக்களுக்கு 86 லட்சம் வீடுகள் அமைப்பு

(பீஜிங்)

சீனாவில், ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்காக, மானிய விலையில் 86 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

வீடு மற்றும் நிலங்களின் விலை அதிகரித்துக் கொண்டே வருவதால், சொந்த வீடு என்பது கனவாகி விட்டதாக, சீன மக்கள் அரசாங்கத்திடம் முறையிட்டுவந்தனர். இதையடுத்து, சீன அரசு ஒரு கோடி வீடுகளைக்கட்ட உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை ஏற்று, குறைந்த வாடகை வீடுகள், மானிய விலை வீடுகளை, மாநில அரசுகள் கட்டி வருகின்றன. தற்போது மானிய விலையில், 86 இலட்சத்து 80 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் மேலும் மூன்றரைக் கோடி மானிய விலை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

# கனடாவில் நிலநடுக்கம்

(வான்கூவர்)

கனடாவில் உள்ள பிரிட்டிஸ் கொலம்பியா வளைகுடாவில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6.4 பதிவானதாக அமெரிக்க நிலவியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர், வான்கூவரிலிருந்து 300 கி.மீற்றர் தூரத்தில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

# கடாபி சொந்த நகரிலேயே உள்ளார் – கிளர்ச்சியாளர்கள் தகவல்

லிபியாவின் முன்னாள் சர்வாதிகாரியான கடாபி லிபியாவில் தனது சொந்த நகரமான சிர் தேவில் பதுங்கி இருக்கிறார் என புரட்சிப் படையினர் கூறுகின்றனர்.கடாபி அருகாமை நாடான நைஜருக்கு தப்பி ஓடிவிட்டதாக வந்த தகவலை அவர்கள் ஏற்கவில்லை. கடாபியின் மனைவி, மகள் மற்றும் கடாபி ஆதரவு அதிகாரிகள் லிபியாவில் இருந்து வெளியேறி விட்டனர்.

ஆனால் கடாபி மட்டும் லிபியாவில் தங்கி இருப்பதை புரட்சிப்படையினர் உறுதிப்படுத்துகிறார்கள். மத்திய தரை கடலோரப்பகுதி மற்றும் அவரது சொந்த நகரமான சிர்தேவில் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சிர்தேவில் இல்லாத நிலையில் அவர் தலைநகர் திரிபோலிக்கு தென்கிழக்கே உள்ள பானி வாலித் இடத்தில் இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இந்தப் பகுதியில் கடாபிக்கு உயிரைக் கொடுக்கும் பழங்குடியின மக்கள் உள்ளனர்.

இந்த 2 நகரங்களைத் தவிர்த்து அவர் சாபா என்ற இடத்திலும் இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த இடம் தெற்குப் பகுதியில் உள்ள தொலைதூரப் பாலைவனம் பகுதியில் அமைந்துள்ளது.

சிர்தேவில் புரட்சிப்படையினர் சமீப நாட்களாக கடாபி ஆதரவாளர்களை எதிர்த்து கடுமையான ரொக்கெட் தாக்குதலை மேற்கொண்டு வருகிறார்கள். மனித உரிமை மீறலுக்காக பதுங்கி இருக்கும் கடாபியை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அவரைக் கைது செய்ய அறிவிப்பு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

நல்லவைகளையே நம்பும் ஒரு மனிதன் தொடர்ந்து தோல்வியடைந்து போவதுதான் விதியா? தீமை செய்ய மனிதனைத் தூண்டுவது யார்? தீமை செய்ய நிர்ப்பந்திப்பது எது? கடவுளே, உலகத்தை இன்னும் கொஞ்சம் நன்றாக சிருஷ்டித்திருக்கலாம் என்று இப்போது தங்களுக்குத் தோன்றவில்லையா? மனிதன் தீமை செய்கின்றானென்றால், அதன் காரணத்திலிருந்தும் பொறுப்பிலிருந்தும் நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியுமா? மனிதனிடம் இந்த பல வீனங்களை உருவாக்கியது யார்? ஏழையாகவும், துக்கம் மிகுந்தவனாகவும், நோய்வாய்ப் பட்டவனாகவும், தோல்வி கண்டு புறக்கணிக்கப்பட்டு தனித்து விடப்பட்ட ஒரு மனிதனாகவும் வாழும் வாய்ப்பு தெய்வத்துக்கு ஏற்பட்டிருந்தால் நான் சொல்வது நன்றாகப் புரிந்திருக்கும். என்னைப் பாருங்கள், எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கிறேன் நான்? எதனுடைய பலிக்கடாவாகவோ என்னைப் படைத்திருப்பது ஏன்? மனிதர்களுக்கிடையில் வாழும் சிலந்திப் பூச்சிகளையும் ஓநாய்களையும் பற்றி இப்போது நான் எதுவும் கேட்கவில்லை. பரிசுத்த ஆத்மாக்களின் இதய ரத்தத்தைச் சிந்த வைப்பது எதனால்? தெய்வம் ஏன் இதை அனுமதிக்கிறது?

**– டொஸ்ரோயெவ்ஸ்கி நாவலில்**

எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்ல முடிந்தால், இறைவன் உண்டு என்பதை கணிதம் மூலம் நிரூபித்துவிட முடியும்.

**– பிரேமிள்**

அது கடவுளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட என் கலகம்.

**– தன் நாவல் பற்றி டொஸ்ரோயெவ்ஸ்கி**

எனக்கு ஒரு படைத்தவனைக் கண்டெடுத்து, அவனுக்காகத் தெருத்தெருவாய் உருண்டு வந்து, நன்றி சொல்லி, போற்றிப் பாடி, தேரிழுத்துக் கொண்டாடி நாறிப் புழுப்பதென்பது. ‘எனக்குச் சுயம் வேண்டாம், அடிமையாயிருப்பதே என் சுகம்’ என்பதன் மீட்சியற்ற வெளிப்பாடு. சுயமற்றவன் கோரும் மரியாதை, உடையில் சிந்திய பருக்கை போல வெறும் அழுக்குதானே தவிர அணி அல்ல.

**– கவிதாசரண்**

போதும் கடவுளை நிந்திக்காதே. கடவுள்தான் இப்போது அழுதுகொண்டிருக்கிறார். காலகாலமாக மனிதர்கள் தங்களைத் தாங்களே கொன்றுகொண்டிருப்பதை அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்மிடமிருந்து நம்மைக் காப்பாற்ற முடியவில்லை. அழாதே உலகம் இப்படித்தான் படைக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு சந்தோஷத்தை விட துக்கமும், அமைதியை விட வேதனையும்தான் பிடித்திருக்கிறது. ரத்தத்தில் குதியாட்டம் போடுவதையே அவர்கள் விரும்புகிறார்கள். கொலையை அவர்கள் கொண்டாடுகிறார் கள்.

**– அகிரா குரஸோவா படத்தில்**

ஏழைகளின் கோபத்திலிருந்து பணக்காரர்களைக் காப்பாற்றும் எளிய தந்திரத்தின் பெயர்தான் மதம்.

**– ஒஸ்கார் வைல்ட்**

நமது திட்டமிடலுக்கும் புரிதலுக்கும் அப்பாற்பட்ட நிகழ்வுகளால் சூழப்பட்டிருக்கும் உலகில் கடவுள் என்று ஒருவர் இருப்பதாக நம்பித்தான் ஆகவேண்டும். ஆனால், காரணமின்றி தற்செயலாக நடைபெறும் நிகழ்வுகளை கடவுள் உருவாக்கியிருக்க முடியாது. ஏனெனில் அவை ‘கடவுளையே’ மறுப்பவை. அதனால் நான் கடவுள் நம்பிக்கை இல்லாதவனாகவே இருக்கிறேன்.

**– ரவிக்குமார்**

ஆயிரம் தெய்வங்களின் மீது நம்பிக்கை வைத்து, உன் மீது நம்பிக்கை வைக்காமல் போனால் உன்னைவிட நாத்திகன் உலகத்தில் வேறு யாருமில்லை!

**– விவேகானந்தர்**

மனிதனின் முயற்சி அவன் பிடிக்குள் சிக்குவதாக இருந்தால் சொர்க்கம் எதற்கு?

**– பிரவுனிங்**

பாட்டாளித் தலைச்சுமைக்காரனுக்கு கல்லென்ன? சாலையென்ன? தெய்வமென்ன? எல்லாமே கழுத்தை இறுக்கும்.

**– தேவதேவன்**

காத்திருப்பின் பெரும் பாலை மீது விழும் கூடலின் குளிர் மழை எதுவானாலும் அது இறைதான்.

**– ஜெயமோகன்**

கடவுள் குறித்த வழிப்போக்கன் ஒருவனின் கேள்விக்கு மௌனமாயிருந்துவிட்டார் புத்தர். ‘கடவுள் உண்டா?’ என்று அவன் கேட்டதற்கு ஏன் மௌனம் சாதித்துவிட்டீர்கள்?’ என்று சீடர்கள் கேட்டனர். புத்தர் சொன்னார்: “உண்டு என்பதற்கான ருசு எதுவும் என்னிடமில்லை.” “அப்போ இல்லை என்று சொல்லிவிட வேண்டியதுதானே?” “இல்லை என்று சொல்வதற்கும் என்னிடம் எந்தவித ருசுவும் இல்லை” என்றாராம் புத்தர்.

# உங்கள் வணிகத்துக்கு மட்டும்தானா நல்ல சூழல்; வன்னியிலுள்ள மக்களுக்கு அது உருவாகக் கூடாதா?

(நேற்றைய பகுதியின் தொடர்ச்சி)

"இன்று தமிழ் மக்கள் கிறிஸ் மனிதன விஷயத்தை வைத்து அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழ தயாராகியிருக்கின்றார்கள். அவர்களுக்குத் தலைமைத்துவம் கொடுக்காமல் நீங்கள் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறீர்கள்" என்று வெளிநாடுகளில் இருக்கின்ற புலி அமைப்பாளரகள் உங்கள் மீது குற்றஞ்சாட்டுவது பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கின்றது.

கிறிஸ் மனிதன் பிரச்சினை என்பது இந்த நாட்டின் சட்டதிட்டத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். இதனைத் தீர்த்து வைப்பதில் வெளிநாட்டுப் பிரஜைகள் சம்பந்தப்படுவதற்கு என்ன தேவை இருக்கிறது? இந்தப் பிரச்சினையை நாங்களே தீர்த்துக் கொள்வோம். இது ஒரு பாரதூரமான விஷயம் இல்லை. இது உருவாக்கப்பட்ட விஷயம். எனவே, நாங்கள் கிறிஸ மனிதன் விடயத்தை இனம் கண்டு அந்தப் பிரச்சினையை இலகுவாக முடித்துக்கொள்ள வேண்டும். நன்றாக அந்த அறிக்கையைப் பாருங்கள்! "கிறிஸ மனிதன் விடயத்தை

> **நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பயங்கரவாதச் சட்டத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவோம். எங்களுடைய பொறுப்பு அதற்கான கோரிக்கையை விடுப்பது மட்டுமல்ல! மாறாக அதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும். இந்த நாட்டில் மீண்டுமொருமுறை பயங்கரவாதமோ அல்லது எந்தவொரு அசாதாரண சூழலோ உருவாகாமல் பாதுகாக்க வேண்டியது அரசினது மட்டுமல்ல, இந்த நாட்டின் பொறுப்புள்ள எல்லா பிரஜைகளினதும் கடமையாகும்.**

வைத்து தமிழ் மக்களை அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழப் பண்ணியிருக்கின்றோம். அதற்கு ஏன் தலைமைத்துவம் கொடுக்கவில்லை?" என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் புலம்பெயர்ந்த புலிப் பினாமிகள் கேட்கின்றார்கள்.

கிறிஸ் மனிதன் சப்பாத்தில் ஸ்பிறிங் பொருத்திக்கொண்டு வருகின்றான். அப்படி, இப்படி, எல்லாம் நீங்கள் தானே அவர்களைப் பார்த்ததுபோல எழுதினீர்கள். அவர்களின சப்பாத்தில் Spring இருககின்றது என்று பொதுமக்கள் மத்தியில் இருந்து அப்பாவித்தனமாகச் சில கருத்துக்கள் எழலாம். ஆனால், ஒரு பொறுப்புள்ள பத்திரிகை கண்ட மாதிரி எழுதக்கூடாது அல்லவா! அதைத் தேடிப் பார்க்க வேணடும். சரவணபவன் எம்.பி. அந்தப் பத்திரிகைக்கு நீங்கள் தானே தலைமைத்துவம் கொடுக்கின்றீர்கள்! எனவே, முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் புதைக்க முடியாது! பத்திரிகை ஆசிரியர் குகநாதன் நல்ல மனிதர், மிகவும் பண்பானவர், அவர் என்ன காரணத்துக்காக உங்களுடன் இருக்கின்றார்? அதுதான் எனக்குக் கவலை! உங்களுடன் இருப்பதனால்தான் அவருக்கு கெட்ட பெயர்! ஆனால், இந்தச் சபையில் சென்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாத்தில் கலந்து கொண்ட நான் அவர் தாக்கப்பட்டமையைக் கண்டித்து உரையாற்றினேன். மறுநாள் நான் மிகவும் சந்தோசபபட்டேன். ஏனென்றால் அந்த தாக்குதலில் சம்பந்தபட்ட சிலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கூட உங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு மாகாணசபை உறுப்பினர்!

**அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் எம்.பி.:** யார் அவர்? யார் அவர்?

**சந்திரகுமார் எம்.பி.:** அந்த விடயத்தில் சட்டப் பிரச்சினை இருப்பதால நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை.

**றிசாட் பதியுதீன் (கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சு) :** அவர் மாகாண சபை உறுப்பினரல்ல, மாநகர சபை உறுப்பினர்.

**சந்திரகுமார் எம்.பி. :** மன்னிக்கவும் மாநகர சபை உறுப்பினர் (இடையீடு) அந்த மாநகரசபை உறுப்பினருக்கு அதில் சம்பந்தமிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கின்றது. குகநாதனின் தாக்குதல் தொடர்பாக பொலிஸார் சிலரைக் கைது செய்திருக்கிறார்கள். விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் உங்கள் பத்திரிகையில் எப்படி அந்தச் செய்தியை பிரசுரித்திருந்தீர்கள் தெரியுமா? 'பிடிபட்டாராம்' என்று நக்கலடிக்கும் விதமாகத்தான் உங்கள் பத்திரிகைச் செய்தி இருந்தது. அதையும் எழுதுங்கள். கண்டியுங்கள் குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டிக்கும் பொறுப்பு பத்திரிகைளுக்கு இருக்கின்றது. பத்திரிகையாளன் ஒருவன் தாக்கப்பட்டால் அதைக் கண்டிக்கும் பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. கண்டியுங்கள்! அது தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தையும் நீங்கள் சொல்லியேயாக வேண்டும். அதைக் கிண்டல் செய்ய வேண்டாம்.

**(சரவணபவன் எம்.பி எழுகிறார்)**

**சந்திரகுமார் எம்.பி.:** தயவுசெய்து இருங்கள்! உங்களுக்கு நான் கொடுத்த சந்தர்ப்பம் முடிந்துவிட்டது.

ஒரு சம்பவம் நடந்தால் அடுத்த நாள் பத்திரிகைகளில் அது சம்பந்தமான செய்தி வரும். சமூகத்தில் பல பிரச்சினைகள் நடக்கின்றன. களவு நடக்கும், ஒரு இளம் பெண்ணும் இளம் ஆணும் காதலித்து பெற்றோரின் சம்மதம் இல்லாமல் ஓடிவிடுவார்கள். அத்தகைய செய்தியை நீங்கள் எப்படி பிரசுரிக்கிறீர்கள்? பெண்ணைக் காணவில்லை என்றுதான் 3 ஆம் நாள்தான் அவர்கள் பருவம் முதிராதவர்கள் என்று செய்தி வெளிவரும். அந்த இளமைத் துடிப்பில் அவர்கள் ஓடிவிட்டு திரும்பி வருவார்கள். அந்த செய்தியை நீங்கள் ஒருபோதும் பிரசுரிப்பதில்லை. உங்கள் பத்திரிகைச் செய்தியைப் பொறுத்தவரையில் அந்த ஆணையோ பெண்ணையோ காண வில்லைதான். பிறகு கட்டுக்கதைகள் வரும். அதற்குப் பக்கத்தில் ஈ.பி.டி.பி முகாம் இருந்தது, அதற்குப் பக்த்தில் இராணுவ முகாம் இருந்தது, புலனாய்வுப் பிரிவினர் போனார்கள் என்றெல்லாம் அதற்கு விவரணம் எழுதுவீர்கள். ஆகவே பத்திரிகைகள் பொறுப்புடன் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும். நீங்கள் மக்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளவேண்டும். மக்கள் அமைதியையும் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் இயல்பு வாழ்க்கையையும் அனுபவிக்கத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஏற்படுத்தப்பட்டுள் இந்த நல்ல சூழலை இன்னும் மேம்படுத்தும் விதமாக நடந்து கொள்ளவேண்டும். தெற்கில் எந்த சுதந்திரங்களை மக்கள் அனுபவிக்கின்றார்களோ அந்த சுதந்திரங்களை எமது பிரதேசங்களிலும் ஏற்படுத்துவதற்குரிய நல்லதொரு சூழலை உருவாக்குவதற்கு தயவுசெய்து நீங்கள் ஒத்துழைக்கவேண்டும்.

அண்மையில் உங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாங்கள் வேட்டியை மடித்துக் கட்டுவோம்" என்று சொல்லியிருக்கிறார். இது என்ன கதை? நீங்கள் வேட்டியை மடித்துக் கட்டியதால் மக்கள் பட்ட அவலம் தெரியும்தானே! நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு மக்களுக்காக சாதித்தது என்ன? அழிவைத் தவிர வேறொன்றுமில்லை. அநியாயமாக அவர்களது வாழ்க்கையைத் தொலைத்ததுதான் மிச்சம். இந்த அவசரகாலச் சட்டத்திற்கூடாக எவ்வளவு நல்ல விடயங்கள் நடந்திருக்கின்றன. அதைப் பாராட்டி ஒருநாளும் எழுதமாட்டீர்களே! திரும்பவும் அவசர காலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரும் வகையிலான வழிமுறைகளைப் பற்றித்தான் நீங்கள் யோசிக்கின்றீர்கள். அப்படி யோசிக்காதீர்கள். அது பிழை.



அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டதற்கு நன்றி கூறும் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆற்றிய உரை.

எங்களுக்கு எதிர்காலத்தில் பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டியிருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டுமென்று இன்று எல்லோரும் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் இந்த நாட்டிலே தொடர்ந்து வைத்திருக்கக் கூடாதென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதையும் நீக்கவேண்டும். ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் விரைவில் நீக்கிவிடுவாரென்று நாங்கள் நம்புகிறோம். மேலும் மக்களைத் துன்புறுத்தும் சட்டங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றையும் நீக்கி நல்லதொரு சூழலை இந்த நாட்டிலே உருவாக்குவாரென்றும் நாங்கள் நம்புகிறோம். அந்த நோக்கில் நாங்களும் வேலை செய்யவேண்டும். மீண்டும் இந்த இரும்புச் சட்டங்களைக் கொண்டுவரும் விதமாக நீங்கள் நடந்து கொள்ளக்கூடாது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு அரச தரபபிலிருந்தும் கூட ஆதரவுக் குரல்கள் வந்திருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன. நல்ல விடயம்! நாங்கள் வெற்றிபெறுவோம். இந்த நாட்டிலே பயங்கரவாதத் தடைச்சட்டம் நீங்கும்.


ஆனால் நீங்கள் அவசரகாலச் சட்டம் நீங்கிவிடக்கூடாது என்ற எண்ணத்துடன்தான் செயற்படுகின்றீர்கள். தயவுசெய்து அவ்வாறு செயற்பட வேண்டாம்! நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பயங்கரவாதச் சட்டத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவோம். எங்களுடைய பொறுப்பு அதற்கான கோரிக்கையை விடுப்பது மட்டுமல்ல! மாறாக அதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும். இந்த நாட்டில் மீண்டுமொருமுறை பயங்கரவாதமோ அல்லது எந்தவொரு அசாதாரண சூழலோ உருவாகாமல் பாதுகாக்க வேண்டியது அரசினது மட்டுமல்ல, இந்த நாட்டின் பொறுப்புள்ள எல்லா பிரஜைகளினதும் கடமையாகும். எனவே அனைத்து இன மக்களும் அச்சூழலை உருவாக்குவதில் பாடுபடவேண்டும். அதில் ஊடகங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதற்கான சூழலை உருவாக்கும்போது, பயங்கரவாதச் சட்டம் இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாடு உருவாகும். ஆகவே, நான் உங்களிடம் வினயமாக கேட்டுக்கொள்வது என்னவெனில், தற்பொழுது உருவாகியுள்ள நல்ல சூழலை மென்மேலும் வளர்ப்பதற்காக நீங்கள் எங்களுடன் ஒன்றாகக் கைகோர்த்துச் செயற்படுவதற்கு முன்வரவேண்டும் என்றுதான். நீங்கள் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த விடுதலைப் புலி ஆதரவாளர்களுடைய அழுத்தங்களுக்கு உள்ளாகவேண்டாம். அவர்களுக்கு இங்கு உருவாகியுள்ள நல்ல சூழல் விருப்பமில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு தெருவிலும் வெளிநாடுகளிலிருந்து வந்த புலம்பெயர் தமிழர்கள் திரிகின்றார்கள். ஒவ்வொரு வீதியிலும் புதிது புதிதாக கட்டடங்கள், கடைகள், கடைத் தொடர்மாடிகள் கட்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்! இவற்றையெல்லாம் புலம்பெயர் தமிழர்கள் தான் செய்கின்றார்கள். இங்கு நல்ல சூழல் இல்லை என்று ஏன் நீங்கள் அங்கு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றீர்கள். அங்கு நல்ல சூழல் நிலவுவதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்தானே?

நீங்கள் உங்களுடைய மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்! முன்பு உங்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன? அப்பொழுது, நீங்கள் உங்களுடைய பத்திரிகையை Foolscap Paper தாளில்கூட அச்சிட்டு வெளியிட்டீர்கள். நான் பார்த்திருக்கிறேன். இன்று அவ்வாறானதொரு நிலை இருக்கின்றதா? இன்று நீங்கள் நவீன இயந்திரங்களை எல்லாம் அங்கு கொண்டு போயிருக்கிறீர்கள். எப்படிக் கொண்டு சென்றீர்கள்? இன்று அங்கு நல்லதொரு சூழல் நிலவுவதால்தானே உங்களுடைய Business பெருகுகின்றது. உங்களுக்கு மட்டும்தானா நல்ல சூழல் உருவாகவேண்டும். வன்னியிலுள்ள சாதாரண மக்களுக்கு உருவாகக்கூடாதா? ஆகவே, நல்லதொரு இயல்பு சூழலை உருவாக்க எல்லோரும் மனவுறுதியுடன் உழைக்க வேண்டும் என்று நான் இந்தச் சபையிலே உருக்கமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

# வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்

## கண்காட்சி நிகழ்வில் அமைச்சர் பசில்



(யாழ்.நிருபர்)

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் காலங்களில் மட்டும்தான் அமைச்சர்கள் வடக்கிற்கு வருவார்கள். தேர்தல் முடிந்தவுடன் வடக்கின் அபிவிருத்தியைக் கைவிட்டு விடுவார்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது. கடந்த தேர்தலில் யாழ். மக்கள் எமக்கு வாக்களிக்காவிட்டாலும் நாம் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியைக் கைவிடப் போவதில்லை.

பத்து இலட்சம் மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி [illegible]ப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்ட குடிசைக் கைத்தொழில் ஊக்குவிப்புக் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, யாழ். மாவட்ட செயலகம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை ஆகியன இணைந்து யாழ் இந்துக் கல்லூரியில் நடத்திய இக் கண்காட்சியில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

மகிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் இலங்கையின் 24 மாவட்டங்களிலும் இக் கைத்தொழில் [illegible]காட்சியை நடத்தி வருகிறோம். எல்லா மாவட்டங்களையும் விட யாழ். மாவட்டத்தில் பெருந்தொகையான மக்கள் இந் நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா 6000 இளைஞர் யுவதிகளை இங்கு அழைத்துள்ளார்.

தேவையான தொழில்நுட்பப் பயிற்சி, திறன் பயிற்சி, முகாமைத்துவப் பயிற்சி, இயந்திர உபகரணங்கள், சந்தைப்படுத்தல் வசதிகள், நிதிச் சேவைகள் போன்றவற்றை வழங்கவுள்ளோம்.

பத்து இலட்சம் குடும்பங்களின் போஷாக்கு, சுகாதாரம் என்பவற்றோடு அவர்களின் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டமாக இத்திட்டம் அமைந்துள்ளது.

வீட்டுத் தோட்டங்களில் மரக்கறிப் பயிர்களை நாட்டி எமக்குத் தேவையான நச்சுத்தன்மையற்ற காய்கறி வகைகளைப் பெற்றுக்கொள்வதாக எமது திட்டம் அமைந்துள்ளது.

திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின்மூலம் குடிசைக் கைத்தொழில்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய ஊதுபத்திகளைக் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம்.

எமது நாட்டு மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றும் கைத்தொழில் துறையை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் பௌசி, கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் வீரகுமார திசாநாயக்க, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உள்ளிட்ட பலவேறு துறைசார்ந்த திணைக்களங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10,105,பா)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மாநாட்டு திகதி மாற்றம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மகாநாடு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த மகாநாடு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் 2011.09.11 அன்று நடக்க இருந்த வருடாந்த பேராளர் மகாநாடு எதிர்வரும் 2011.09.25 அன்று நல்லூர் கந்தன் வடக்கு வீதியில் உள்ள நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் நடைபெறும்.

கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் மகாநாட்டிற்கு முதல் நாள் 2011.09.24 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு 57/48, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தீவகக் கல்வி வலயத்தில் 8 பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆரம்பக்கல்வி, தமிழ், சங்கீதம், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேட கல்வி, வழிகாட்டலும் ஆலோசனையும் 2 ஆம் மொழி சிங்களம் ஆகிய 8 பாடங்களிற்கே ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்படவுள்ளனர். மேற்படி ஆசிரியர் தரம் - I அல்லது 2 - II ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பட்டதாரி ஆசிரியர்களின் டிப்ளோமா நிறைவுசெய்திருப்பதுடன் ஆசிரியராக 7 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும். மேலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயின் ஆசிரியர் சேவையில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஏனைய கல்வி வலயங்களிலிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

## இலங்கைக்கு...

ஏற்படுத்தி உள்ளது. நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பா.ஜனதா சார்பில் குரல் கொடுத்து வருகிறோம். எனவே இந்தப் பிரச்சினை தொடர்பாக எனது தலைமையில் அனைத்துக் கட்சி குழு ஒன்று இலங்கை செல்லவுள்ளது. அதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

## மர்ம மனிதன் குறித்த...

மர்ம மனிதன் தொடர்பாக அவசரமாக தொடர்புகொள்ள ஒரே நேரத்தில் பலர் தொடர்புகொள்ளக் கூடியவாறு தொலைபேசி கட்டமைப்பு அழைப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் - 09, பருத்தித்துறை - 04, சாவகச்சேரி - 03, காங்கேசன்துறை - 04 போன்ற இடங்களில் ஒரே நேரத்தில் அழைப்பினை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரிக்கப்பட்ட 4 இடங்களிலும் காங்கேசன்துறைப் பகுதியில் பலாலி, இளவாலை, கே.கே.எஸ், தெல்லிப்பளை ஆகிய இடங்களிலும், யாழ்ப்பாணப் பகுதியில் கோப்பாய், ஊர்காவற்துறை, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, சுன்னாகம், மானிப்பாய், யாழ்ப்பாண நகரம், பருத்தித்துறைப் பகுதியில் மருதங்கேணி, நெல்லியடி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரிப் பகுதியில் சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய பிரதேசங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய இராணுவத்தினரும் இப்பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்குப் பொறுப்பாக 51, 52, 55 இராணுவ படைப்பிரிவு 3 பிரிவுகளாக இயங்கும்.

இதுதவிர இராணுவத்தினர், பொலிஸ், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இராசநாயகம், மக்கள் குழுக்கள், மனித உரிமை குழு தலைவர்கள், பல்கலைக்கழக பிரதிநிதிகள் ஆகியோரை முன்னிலைப்படுத்தி மாவட்டத்திற்கான விழிப்புக்குழு அமைப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த விடயங்களுக்கு பத்திரிகைகள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அறிக்கைகளை பத்திரிகைகள் மிகக் கவனமாகப் பிரசுரிக்க வேண்டும். தகவல்கள் தெளிவாக மக்களுக்கு வெளிக்கொணர பத்திரிகை நிறுவனங்கள் உழைக்கவேண்டும் என இக்கூட்டத்தில் ஆளுநர் சார்பாகவும், கலந்துகொண்டவர்கள் சார்பாகவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (எஸ்)

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கொழும்பு)

திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மையில் உள்ள கடற்கரையில் அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினமிரவு பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான கலப்பதி ஆராய்ச்சிகே சமிந்த (வயது - 38) என்பவரே மரணமானவராவார். மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் வழங்கிய தகவல்களை அடுத்து இரண்டு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

## கடுகதி ரயில் சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டைக்கும் வவுனியாவிற்கும் இடையிலான மற்றுமொரு கடுகதி ரயில் சேவை இன்று ஆரம்பமாகிறது.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மேற்படி ரயில் சேவையை இன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பதுடன் இதற்கான விசேட வைபவம் இன்று பிற்பகல் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

## வாழ்வு...

நாம் உணர்ந்து செயற்படுகின்ற அதேவேளை எமக்குக் கிடைத்துள்ள இந்த அதையான சூழலைப் பாதுகாக்கவும் நாம் அனைவரும் முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

## இலங்கையை முன்னோக்கி...

கருத்து கேட்கப்பட்டபோது,

நாம் மன்னிப்புச் சபை அறிக்கையிலிருந்து குறிப்பெடுத்துள்ளோம். நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்காக நாம் காத்திருக்கிறோம் என எண்ணுகிறேன். வெளிப்படையாக , பிளேக்கின் விஜயங்களில் நோக்கங்களில் ஒன்றானது இந்த அறிக்கை தொடர்பாக இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும் அதன் (அறிக்கை) மூலம் அவர்கள் நம்பகமான பணியொன்றை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதுமாகும் என விக்டோரியா நூலண்ட் கூறினார்.

சுயாதீன விசாரணையொன்றுக்காக இலங்கை அரசாங்கத்திற்கு காலவரையறை கால அவகாசம் எதுவும் வழங்குகிறீர்களா? என செய்தியாளர் வினவினார்.

அவர்கள் இந்த அறிக்கை நவம்பர் மாதம் வெளிவரும் என கூறியுள்ளார்கள். அது சிறந்ததாக, பலமானதாக, நம்பகமானதாக, இலங்கையை முன்னோக்கி கொண்டுசெல்லக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துவதே எமது முதல் இலக்காகும் என விக்டோரியா நூலண்ட் பதிலளித்தார்.


## மர்ம மனிதன்...

தடிகளுடன் வந்த இராணுவத்தினர் அப்பகுதியில் நின்ற பொதுமக்களை ஓரிடத்தில் கொண்டு போய் விட்ட பின்னர் 5 இளைஞர்களைப் பிடித்து விசாரித்தனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் இராணுவத்தினர் வைத்திருந்த தடிகளைப் போடுமாறு பணித்ததுடன், குறித்த 5 இளைஞரையும் தாம் கொண்டு சென்று விசாரிக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். எனினும் குறித்த இளைஞர்களை பொலிஸார் கூட்டிச் செல்ல பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து ஐவரும் விடுவிக்கப்பட்டனர். இதனால் நேற்றிரவு ஏற்பட்ட பதற்றம் முடிவிற்கு வந்தது.

### செய்திப்பாணம்

**மர்மமனிதன் கிறீஸ்பூதம் மனநோய்த் தோற்றப்பாடு**
**அதர்மத்தின் தலையெடுப்பில் அரசு திணறும் - உதிர்த்திடும்**
**முதல்மனிதன் முதற்கொண்டு மந்திரிகள், படைஅதிகாரி**
**புதல்வருமாம் நாட்டுடைப் புதிர்!**



# யுத்தம் முடிவடைந்த நிலையிலும் மீனவருக்கு பாஸ் நடைமுறை ஏன்?

## கேட்கின்றனர் மன்னார் மீனவர்கள்



(மன்னார்)

யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில் மீளவும் மீன்பிடிப்பதற்கு பாஸ் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட் மீனவர் கூட்டுறவுச்சங்க தலைவர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டம் உட்பட வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தெற்கிலிருந்து வருகைதந்த ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடொன்று நேற்று முற்பகல் மன்னார் மாவட்ட மீனவர் சங்க சமாசத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீண்ட காலமாக இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிப்பது முன்னரைவிட அதிகரித்துள்ளது, இதனால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பெரும் சிரமங்களையும் கஸ்டங்களையும் எதிர்நோக்கியிருக்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, பாஸ் நடைமுறைகள் நடைமுறையில் இருக்கும் நிலையில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி மன்னார் கடற்பரப்பில் பிரவேசித்து மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருவதனாலும் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு கஸ்டங்கள் அதிகரித்திருப்பதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வட கிழக்கு பிரதேச இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் சுட்டிக்காட்டினார்.

நீர்கொழும்பிலுள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், மன்னார் மாவட்ட மீனவர் சமாசத்தின் தலைவர் மொஹமட் ஆலாம், சமாசத்தின் செயலாளர் நிக்ஷன் குரூஸ், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்ட இணைப்பாளரும் வட கிழக்கு இணைப்பாளருமான ஜேசுதாசன் உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள மீனவர் அமைப்புக்களின் தலைவர்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## படகு விபத்தில் 163 பேர் பலி



(தன்சானியா)

தன்சானியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் 163 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சடலங்கள் தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருவதாகவும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தன்சானியாவின் ஸான்ஸிபாரா தீவினை அண்டிய பிரதேசத்தில் படகு கவிழ்ந்ததினால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த படகில் 600 பேர் பயணம் செய்ததாகவும், இதில் 325 மீட்கப்பட்டுள்ளதாகவும் ஸான்ஸிபாராவின் அவசர சேவை அமைச்சர் மொஹமட் அபூட் குறிப்பிட்டுள்ளார். மீட்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அண்டைய நாடுகளிடம் ஸான்ஸிபாரா தீவுகள் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை பணியில் அமர்த்துவதற்குத் தடை

இலங்கையில் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பாக மிகவும் அவதானமாக செயற்படுமாறு சகல அதிகாரிகளுக்கும் அறிவித்தல் வழங்கியுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த ஆண்டுக்குள் தொழிலாளர் பிரச்சினைகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பாக விஷேட வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் சம்பள நிர்ணயச் சபைகள் ஊடாக தொழிற் பிரிவுகள் பலவற்றின் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்க அடுத்த வருடத்திற்குள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது

## யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களை வாக்காளர் அட்டையில் பதிய விசேட திட்டம்

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் தங்கியிருந்தவர்களின் விபரங்கள் வாக்காளர் பதிவில் உள்ளடக்கப்படவுள்ளன. இதற்காக விசேட வேலைத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்களை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டில் உள்வாங்கிக் கொள்வதற்கான விண்ணப்பங்களை பிரதேச கிராம சேவகரிடம் இருந்து அல்லது எந்தவொரு மாவட்ட தேர்தல்கள் செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விண்ணப்பங்கள் கடந்த 1 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் தங்களுக்கான மாவட்ட தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியுள்ளவர்கள் வாக்காளர்களாகத் தம்மை பதிவு செய்து கொள்வதற்கான வேலைத் திட்டம் ஒன்று எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் 1ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுதவிர, யுத்தம் காரணமாக இதுவரை தம்மை வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யாதவர்கள் இருப்பின் வாக்காளர் உரிமை கோருதல் மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றை நவம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச சேவைகள் தொடர்பான பயிற்சி மத்திய நிலையம் அமைக்கத்திட்டம்

(கொழும்பு)


அரச சேவைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்குச் சகல வசதிகளையும் கொண்ட பயிற்சி மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன், இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த மத்திய நிலையத்தை அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், அடுத்த வருடத்திலிருந்து அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் போதும், இடமாற்றங்களை வழங்கும் போதும் முறையான விதி முறைகளை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட ஏற்பாடுகளுக்கான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பொது நிர்வாக, மக்கள் தொடர்பு, திறண் அபிவிருத்தி விரிவாக்கல், மற்றும் தொழில் துறை அமைச்சுக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. அரச சேவையாளர்களுக்காக சிறந்த சுற்றுச் சூழலுடன் இருப்பிட வசதிகளை வழங்குதலுக்கான அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

## பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களை பதிய அறிவுறுத்து




பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் தங்களது பதிவுகளை மேற்கொண்டு பாடாசாலை சேவையில் ஈடுபட வேண்டுமென தனியார் போக்குவரத்து துறை அமைச்சர் வி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் மிக மோசமான வசதியீனங்களுடன் சேவையில் ஈடுபடுவது தொடர்பாக பிள்ளைகளின் பெற்றோர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே இது நடைமுறைக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் தரக்குறைவான வசதியுடன் வாகனங்கள் எவையேனும் சேவையில் ஈடுபட்டால் 0112595555 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் கேட்டுள்ளது.

மேற்படி பதிவு நடைமுறை எதிர்வரும் சர்வதேச சிறுவர் தினத்தில் நடைமுறைப்படுத்த விருப்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு காட்டுப் பகுதிகளில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு, மற்றும் வெல்லக்கந்த காட்டுப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருந்த பெருந்தொகையான ஆயுதங்களை தாம் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இரகசிய தகவலையடுத்து மகா ஓயா பொலிஸ் விசேட குழு ஒன்று அப்பகுதிகளுக்கு சென்று ஆயுதங்களை மீட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று, செங்கலடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு காட்டுப்பகுதிக்குள் ஆயுதங்கள் உள்ளதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து ஆயுதங்கள் மீட்க்கப்பட்டன. இதன்படி 81 மி.மி ரக மோட்டார் குண்டுகள்-04, 60 மி.மி ரக மோட்டார் குண்டு-01, ஆர்.பி.ஜி. குண்டுகள்-02. மீள்மின் நிரப்புக் கருவிகள்-2, மோட்டர் பியூஸ்-06 கண்ணிவெடிகள்-04, ரீ-56 ரக துப்பாக்கி-1, ரவைச்சுற்றுகள்-49, டெனேட்டர் - 05 ஆகியனவே மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புலிகள் மட்டக்களப்பை விட்டு வெளியேறிய போது மறைத்து வைத்து விட்டு சென்ற ஆயுதங்கள் உள்ளதாக கருதப்படுகிறது. இது தவிர புலிகள் அமைப்பில் பிளவு ஏற்பட்ட போது பல போராளிகள் ஆயுதங்களை தூக்கி வீசிவிட்டு தமது வீடுகளுக்கு சென்றனர். இந்த ஆயுதங்களும் சிலரின் கைகளுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புத்தூரில் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டது

புத்தூர் பகுதியில் பொலிஸாரினால் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஆணின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த சுரேஸ் (வயது-27) என்பவரது சடலமே அதுவென அவரது மனைவியால் அடையாள காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வேலைக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற மேற்படி நபர் அதன் பின்னர் வீடு திரும்பாததை அடுத்து, மனைவி சுன்னாகம் பொலிஸாரிடமும், கிராம சேவை அலுவலரிடமும் முறைப்பாடு செய்திருந்தார். இந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## இலங்கையில் தற்கொலை முயற்சி குறைவடைவதாகத் தகவல்

இலங்கையில் முன்னரைவிட தற்கொலைச் சம்பவங்களின் அளவு குறைந்து செல்வதாகக் கணிப்பீடுக்ள் தெரிவிக்கின்றன.

தற்போது இலங்கையில் தற்கொலை முயற்சியால் நாளொன்றுக்கு 12 உயிரிழப்புகள் நிகழ்கின்றன. அத்துடன், நாளொன்றின் தற்கொலை முயற்சிகள் ஆயிரக் கணக்கான வகையில் இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் 15 தொடக்கம் 45 வயதிற்கு இடைப்பட்டவர்களே அதிகளவில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

உலக தற்கொலை ஒழிப்பு தினம் நேற்று அனுஷ்டிக்கப்படும் நிலையில் தற்கொலை ஒழிப்புக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்கள் பல நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சாதாரண தர கல்வித்திட்டத்தை 5 பிரிவாக அமுல்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் 1977ஆம் ஆண்டு கல்வித்திட்ட முறைப்படி ஐந்து பிரிவுகளாக அமுல்படுத்தவுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய ஐந்து துறைகளாக மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது. 9ஆம் தரத்தில் கல்விகற்கும் மாணவர்கள் விஷேட பரீட்சை ஒன்றுக்குத் தோற்றுவதன் மூலம் மேற்படி பிரிவுகளுக்கு தெரிவுசெய்யப்படுவர். எதிர்வரும் வருடத்திலிருந்து ஆறாம் வகுப்புக்கு நுழையும் மாணவர்களுக்கு இப் பாடத்திட்ட முறைமை அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

SRI LANKA RED CROSS SOCIETY
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணம்
இரவு - பகல் அம்புலன்ஸ் சேவை

அழையுங்கள்:
021 - 222 2561
021 - 222 9792
021 - 321 5555
(C/942)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.